முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

—வார இதழ்—

முரசு ௬ | ௨—௬—௬௮ | வெள்ளி | ஒலி ௮



திராவிடப் பாட்டாளி மக்களே; ஒன்று சேருங்கள்!

தஞ்சை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

திருவாரூர்.

அன்புடையீர் !

நமது மாவட்ட மாநாட்டிற்கான துவக்க வேலைகள் அனைத்தும் ஆரம்பமாகிவிட்டன. அழகுற மாநாட்டுப் பந்தலை அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. நமது மாநாட்டை சீரும் சிறப்புமாக நடத்தவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு கிளைக் கழகத்தின் கையிலுமிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- இரு அறிவிப்புச் சுவரொட்டிகள் அனுப்பப்பட்டு ஆங்காங்கு தட்டிகளில் ஒட்டப்பட்டு விளம்பரமாகி வருகின்றன. அவைகளையும் பார்வையான இடங்களில் தட்டிகளில் ஒட்டி வைப்பதோடு, எடுப்பான சுவர்களில் உரியவர்களைக்கேட்டுக் கொண்டு, அழகான முறையில் ஓவிய நண்பர்களைக் கொண்டு எழுதச் செய்து விளம்பரம் செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- மே மாதம் 5-ந் தேதியன்று எல்லாக் கிளைக் கழகச் சார்பிலும் "மாநாட்டு விளம்பர நாள்" கொண்டாட வேண்டுகிறோம். அன்று காலை முதல் தோழர்கள் "மெகபோன்"—ஒலி பெருக்கிகள் மூலம் சுற்று வட்டார ஊர்கள் அனைத்துக்கும் சென்று, மாநாட்டு சிறப்பு குறித்தும், மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்கள், கலை நிகழ்ச்சிகள் பற்றியும் எடுத்துக் கூறி அனைவரையும் கவரும் வகையில் விளம்பரம் செய்திட வேண்டுகிறோம்.

- மாநாட்டன்று காலை, திருவாரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வல மொன்று நடத்த பெரு முயற்சி செய்கிறோம். ஊர்வல மெனில் இதுவரை எந்த மாவட்ட மாநாட்டிலும் இல்லாத வகையில் நமது தஞ்சையின் பெருமையை உயர்த்துவதாக அமைதல் வேண்டும். எங்கு நோக்கினும் கொடிகளாய்க் காட்சி தரவேண்டும். இலட்சிய முழக்கம் இடி முழக்கமென ஒலித்திட வேண்டும். ஒவ்வொரு கிளைக் கழகத்தின் பெயர் தாங்கிய கொடிகள், தட்டிகள் ஊர்வலத்தில் ஒளிவிட வேண்டும். வட்டக் கழகங்கள் தங்கள் தங்கள் கிளைக் கழகங்களை அணி வகுத்துத் தலைமையேற்றுப் பவனிவருவது சிறப்பாக இருக்கும். சில கிளைகளில் இருந்து சிறு சிறு அழகிய தேர்கள் அலங்கரித்துக்கொண்டு ஊர்வலத்தை இன்னும் எழிலாக்கப் போவதாக ஆர்வமுடன் அறிவித்திருக்கிறார்கள். சில கிளையினர், கழகத் தலைவர்கள் படங்களை அட்டைகளில் பெரிய அளவில் தயாரித்து, அவைகளைக் கம்புகளில் இணைத்து, ஊர்வலத்தின் நடுவே உயரப் பிடித்துக்கொண்டு வருகிறோம் எனத் தெரிவித்துள்ளனர். இம்மாதிரி சிறப்புகளில் தங்கள் கிளையும் பங்கு கொள்வதோடு இதைவிட ஊர்வலத்தை எழிலாக்கும் நல்ல முறைகளைக் கையாள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

- தங்களுக்கு முன்பே தந்துள்ள தகவலின்படி மாநாட்டிற்கான கிளைக்கழக நன்கொடை ரூபாய் பத்தையும் இதுவரை அனுப்பாமலிருந்தால் உடனே அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

- தங்களூர் மாவட்டப் பிரதிநிதி வரவேற்புக் குழு உறுப்பினராவார். அவர் மாநாட்டிற்குச் செலுத்தவேண்டிய வரவேற்புக் குழுக் கட்டணம் ரூபாய் ஐந்தையும் உடன் அனுப்பி வைத்தால் அழைப்புச் சீட்டுகள் அனுப்ப வசதியாக இருப்பதோடு, வரவேற்புக் குழு உறுப்பினர் என்பதும் உறுதி செய்யப்பட ஏதுவாக இருக்கும்.

- ஒவ்வொரு கிளையின் செயலாளரும் மற்றொரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரும் மாநாட்டின் பிரதிநிதிகளாவர். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒவ்வொருவரும் ரூபாய் மூன்று பிரதிநிதி கட்டணமாக அனுப்பிவைத்துத் தங்களை முன்கூட்டியே பிரதிநிதிகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிரதிநிதிகள்தான் மாநாட்டுத் தீர்மானங்களை ஆலோசிக்கக்கூடிய தகுதி படைத்தவர்களாவார்கள்.

- வரவேற்புக் குழுவினருக்கும், மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் மேற்கண்ட கட்டணங்கள் செலுத்தியான பிறகு, மாநாட்டிற்கான நுழைவுச் சீட்டுக்கெனத் தனிக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

- ஊர்வலத்தையும் மாநாட்டு நிகழ்ச்சிகளையும் திரைப்படமெடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. தஞ்சையின் எழுச்சியை—கழகத்தின் வலிவை—அனைவருக்கும் உணர்த்தும் வகையில் தங்கள் ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமெனப் பெரிதும் கேட்டுக்கொள்கிறோம்.

மு. கருணாநிதி, பொருளாளர்.

என். எஸ். இளங்கோ, வரவேற்புக்குழுத் தலைவர்.

கு. அடைக்கலம், ப. நாராயணசாமி, க. நாகப்பன்,
அ. நடராசன், சி. கிருட்டினமூர்த்தி, விளம்பரப் பொறுப்பு.
தொ. ப. தலைவர்கள். செயலாளர்கள்.

தொழிலாளர் திருவிழா!

விதைத்துழுது அழுகிறாய்;
வதைத்தறுத்துச் செல்கிறான்!
கொண்டு சென்று குவிக்கிறாய்;
கோட்டிப் பூட்டிவைக்கிறான்!

பார், பாட்டாளித் தோழனே நன்றாகப் பார்! இதயத்தை உறுத்துகிறதா..... மூடிக்கொள்ளாதே, கண்களை! விழித்துப் பார்! வேதனை எழும்புகிறதா? பரவாயில்லை, பார் ... நீதான் பார்க்க வேண்டும்...கண் மூடிக் கிடந்தவனே, நான் காட்டுவது தெரிகிறதா? நீதான் அவன்... அதை நினைத்தவண்ணம் இக் காட்சிகளைப் பார்!

ஏர் பிடித்துழுகிறாய்;
மார்பிலுதைத்து வதைக்கிறான்!
பாடுபட்டு நெய்கிறாய்;
பட்டுடுத்தி மகிழ்கிறாய்!

ஏன் கண்களை மூடிக்கொள்கிறாய்? கடினமாக இருக்கிறதா? ...நீதானப்பா நாட்டின் தேனீ, நடமாடும் 'தெய்வம்'!...இந்தக் காட்சிகளைக் கண்டதுமே, தவிக்கிறாயே! இத்தனை நாள், வேதனை உன்னை சந்தித்தபோதெல்லாம் எங்கே மறைந்து போய்க் கிடந்தது, இந்த ஆத்திரம்? இன்னுங்கொஞ்சம்பார்!

கருவிகளைக் காண்கிறாய்;
கைக்கொண்டவன் ஆள்கிறான்!

அதோ, அடிக்கிறானே கம்பு; அது ஏது தெரியுமா? நீ வெட்டித் தந்ததுதான்! சுட்டுப் பொசுக்குகிறானே அந்தத் துப்பாக்கிகள்; அவை நீ அன்று செய்து தந்தவைதான்!

காதுகளை மூடிக்கொள்கிறாயே, உழைத்து ஓடான உத்தமனே! என் பேச்சு, உன் உதயத்தைச் சுட்டெறிக்கிறதா? பாவம்! நீ, என்ன செய்வாய்? உனக்கு யாரும் இந்தக் காட்சிகளைக் காட்டவில்லை, இது நாள்வரை!

ஆகவேதான் இந்தக் காட்சிகளைக் கண்டதும் துடிக்கிறாய்! தொல்லை செய்வோரின் துடுக்கடக்குவேன் என்று உன் இதயம் துடிப்பது என் கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது!

உத்தமனே, அவசப் படாதே! இன்னும் கொஞ்சம் கேள்! உன் மீது சவாரி செய்யும் பிரபுக்களின் ஆணவப் பிடரியை நீ ஆட்டவேண்டும் என்பதுதான் எனது ஆசை!

ஏன் இப்படி உனது கண்கள் சிவப்பேறுகின்றன? எனது வார்த்தைகள் உன் கோபாக்கினியைக் கிளறுகின்றனவா? மகிழ்ச்சி நண்பா, எனக்கு இரட்டை மகிழ்ச்சி! உன் இதயத்தில் எரிமலை உதயமாக வேண்டும் என்பதுதானப்பா என் ஆசை! அது ஏற்பட்டுவிட்டதென்றால் என் லட்சியம் நிறைவேறும்; நிம்மதி பெறுவேன். கிளி கூண்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டது! காளை கட்டவிழ்த்துக் கொண்டது! வீரன் விலங்கை முறித்துக் கிளம்பிவிட்டான் என்று எக்காளம் முழக்குவேன்! அதில்தான் நண்பா, உன் வாழ்வே இருக்கிறது!

"சரி, என்னை நான் புரிந்துகொண்டேன். இப்போது என்ன செய்வது நான்? என்னை வேதனையிலாழ்த்தியவனை விரைவாகப் போய் வீழ்த்திவிட்டு வந்துவிடட்டுமா? கட்டளையிடும் கரங்களைக் கண்டதுண்டமாக்கி, கர்ஜனையிடும் வாயை இரண்டாகப் பிளந்து, உதைக்கும் காலை ஓராயிரம் துண்டு போட்டு, உழைக்காது மெருகேறி மினுமினுக்கும் அவன் 'சதைமலை' மீது ஏறி கோரத் தாண்டவம் செய்யட்டுமா? இத்தனை நாள் என் இரத்தமெல்லாம் உறிஞ்சிக் கொழுத்தானே, அதை வட்டி போட்டு வாங்கி, நான் உழைத்து அலுத்த இப்பூமிக்கு அர்ப்பணம் செய்யட்டுமா?" என்று கேட்கிறாய்... வேண்டாமப்பா, வேண்டாம்! வேதனைகளை எடுத்துக் காட்டு விளக்கியதும், வெடித்த எரிமலையாகி விட்டாயே! வெடித்த எரிமலை, விரைவில் தன் கோரச் சப்தம் இழந்து அடங்கிவிடுமாம், அதுதெரியுமோ உனக்கு? உன் உணர்ச்சி அப்படியாகி விடக்கூடாது! ஆத்திரம் அறிவை அழித்துவிடும்! வேகம் விவேகப் பாதைக்கு முட்டுக்கட்டை போட்டுவிடும்! கொதித்து எழுந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குந்தி விடுவது பெரிய காரியமல்ல; வெட்டி வீழ்த்தி இரத்தம் சிந்தி விட்டுப் போய்விடுவது பிரமாதமல்ல; உனது இந்தப் புது உணர்ச்சி புது வாழ்வு காணப் பயன்பட வேண்டும்!

"உணர்ச்சியைக் கிண்டி விட்டு உபதேசம் செய்யக் கிளம்பி விட்டாயா?" என்று என்னை இப்படி எரித்து விடுவது போலப் பார்க்கிறாயே! வேண்டாம் இவ்வளவு கோபம். வேதனைப்பட்டவனே! அவசரத்துக்கு அடிமையாகாதே! நான் உபதேசம் செய்ய வரவில்லை. 'உபதேசி'யாக 'உருத்திராட்சம்' உருட்டும் வீணன் நானல்ல என்பதுதான் உனக்குத் தெரியுமே! உன் வாழ்வு செம்மைப்பட வேண்டும்! உயரப்பனும் ஒட்டப்பனும் ஒன்றாக வேண்டும்! உன் உரிமைகளை நீ பெற்றுத் துன்பமற்று வாழ வேண்டும் என்ற ஆசையினாலேதான் சொல்கிறேன்!

உழைப்போனே! உன் நிலையைப் பார்; சிந்தி; 'ஏன்' என்று கேள்; சக்திகளைத் திரட்டு; உரிமைப் போரில் இறங்கு; உன்னை அடிமைப் படுத்தும் அறியாமையை எதிர்த்து, ஜாதீய மறையைத் தகர்த்து முதலாளித்துவத்தை முறியடித்து வெற்றி காணப் புறப்படு! அவசரப்பட்டு ஆபத்துக்கு இரையாகாதே! வெண்ணெய் திரளுவதற்குள் தாழியை உடைத்து விடாதே!

—அறிஞர் அண்ணா

வெள்ளி 2-5-58 சென்னை

நாடகமாடுகிறார்!

வயதாகிவிட்டது; இனிமேல் வாலிபருக்கு வழிவிட்டு விலகிக்கொள்வதுதான் கட்சிக்கும் தனக்கும் நல்லது—என்று நினைத்தார்; உடனே ராஜிநாமாவை எழுதிக்கொடுத்துவிட்டு விலகிக்கொண்டார், உலகப் புகழ்பெற்ற வின்ஸ்டன் சர்ச்சில்!

இது கன்சர்வேடிவ் கட்சியிலே ஏற்பட்ட நிலைமை! தொழிற் கட்சியிலும் கூட அப்படியேதான்!

ஆட்லி பிரபு—இருபது ஆண்டுகள் தொழிற் கட்சியின் தலைவராக இருந்தவர்!

செயலாற்றப் போதுமான திறன் இருந்தபோதும்கூட; இளம் அரும்புகள் மணம் பரப்ப வேண்டுமென்று நினைத்தார். உடனே மலராக இருந்த அவர் தன் இதழ்களை மூடிக்கொண்டார்.

உடனடியாக கட்சியிலே தேர்தல் நடந்தது. கெயிட்ஸ்கல் என்னும் வாலிபர் பெருவாரியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

—பதவியை மதுவென்று நினைத்து; அதன் போதையிலே சாய்ந்து விடாதவர்கள் வாழ்கின்ற ஜனநாயகத்தின் தொட்டிலாம் இங்கிலாந்தின் அரசியல் வரலாற்றிலே இவையெல்லாம் முக்கியமான சம்பவங்கள்; அதே நேரம் வழக்கமான—சாதாரண சம்பவங்களும்கூட!

ஜனநாயகத்தை பொறுத்தவரையில் இங்கிலாந்து காட்டிய பாரம்பரியத்தையே பாதையாகக் கொண்டிருப்பதாகக் கூறும் பண்டித நேருவோ பதவி விலகல் படலத்தை ஒரு நாடகமாக நினைத்து; தேவையான நேரத்திலெல்லாம் இந்திய அரசியலில் மேடை அமைத்து நடித்துக்கொண்டிருக்கிறார்.

"நான் பிரதமர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்யப் போகிறேன்!"

—இப்படிச் சொல்லிக்கொண்டு; பதவியை விடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் கேலிக்குரிய அரசியல் தலைவர் உலகத்திலேயே இவர் ஒருவர்தான் என்று சுட்டிக்காட்ட வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகிவிட்டார், பண்டிதர்!

கதை யொன்று சொல்லுவார்கள்:

அழகியாக இருந்தாள் ஒருத்தி!

அழகு முகத்திலும், உடல் அமைப்பிலும் தோகை விரித்து ஆடுகிறது—என்பதை விளக்கக் கண்ணாடிகள் தேவையில்லையே; வண்டுபோல் சுற்றிச் சுற்றி வரும் ஆடவரின் எண்ணிக்கையே போதுமே!

திடீரென்று ரசிகர்கள் எண்ணிக்கை குறைந்தது!

அழகியின் நெஞ்சிலே கவலை தோன்றியது!

இதுவரை 'கண்ணாடியை ஒரு முறையாவது உபயோகிக்காத காரிகை' என்று பெயரெடுத்த அந்தப் பூங்கொடியாள்; கண்ணாடி கொண்டுவரச் சொன்னாள்!

வாழ்நாளில் முதல் தடவையாக அப்போதுதான் அவள் கண்ணாடியைக் கொண்டு வரச் சொன்னாளாம்!

—மாஜி அழகி தன்னை மொய்த்துக் கொண்டிருந்த மைனர்கள் தொகை குறைந்ததும், கண்ணாடியைத் தேடுகிறாள்!

பண்டிதரின் நிலையும் அப்படியே—என்பதைத்தான் நாமும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தன்னைப்பற்றிக் கட்சிக்குள்ளே இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள்; பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள்—என்கிற உண்மை விளக்கம் தரும் கண்ணாடியை உபயோகிக்காமலேயே காலத்தைக் கழித்தவர், அவர்!

இப்போதுதான் அவருக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது—தனது உண்மை அழகினைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று!

அதனால்தான் பதவி விலகல் என்னும் பாணத்தை விடுத்து; அதைக் கண்ணாடியாக உபயோகித்து அதன் முன்னே சென்று நிற்கிறார், பரிதாபத்திற்குரிய பண்டிதர்!

உண்மையிலேயே தனக்குப் பிறகு ஒரு வாரிசைத் தயார் செய்ய வேண்டும்—என்பதல்ல அவரது நோக்கம்!

ராஜிநாமாவிற்கு அவர் குறிப்பிட்டிருக்கும் காரணங்களே மிகவும் வேடிக்கையாக இருக்கின்றன!

உடல்நிலை சரியில்லை—என்கிற 'ஆச்சாரியார் காரண'த்தை அவரே இல்லையென்று மறுத்திருக்கிறார்.

"அமைதியாகச் சிந்திக்க அவகாசமே கிடையாது; அன்றாட வேலைப் பளுவிலிருந்து விலகியிருந்து சாதாரணப் பிரஜை என்ற முறையில் சிந்திக்க அவகாசம் தற்போது வேண்டுமென்று கருதுகிறேன்!"

—இப்படி பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது இதுதான் முதல் தடவையாக இருக்க வேண்டும்!

அமைதியாக சிந்திப்பதற்கு அவகாசமே கிடையாதாம்!

அப்படியானால் இதுவரை அவர் ஆற்றியிருக்கும் செயல்கள் அனைத்தும்; அமைதியற்ற அரைகுறை சிந்தனையின் விளைவுதான் போலும்!

ஒருவிதத்தில் பண்டிதரின் இந்தக் கூற்றை நாம் உண்மையென்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது!

பண்டிதர் தென்னகம் வந்த போதெல்லாம் தன் வசம் இழந்து; சீறி விழுந்திருக்கிறார்!

அர்த்தமே இல்லாமல் "நான்சென்ஸ்", "காட்டுமிராண்டித்தனம்"—என்பன போன்ற அநாகரிக வார்த்தைகளை அடிக்கடி உபயோகித்திருக்கிறார்!

—இவையெல்லாம் ஒரு பண்புள்ள மனிதரின் **அமைதியான சிந்தனையின்** விளைவா?

—இதுபோன்ற கேள்விகளை நாமே பல மேடைகளில் ஆயிரக்கணக்கான முறைகள் கேட்டிருக்கிறோம்!

இப்போது பண்டிதரே அதற்கான பதிலைத் தருகிறார்—தனக்கு அமைதியாகச் சிந்திக்கப் போதிய அவகாசமே இல்லை என்று!

பாவம், அவர் கூறியிருக்கும் மற்ற காரணங்கள் எதுவுமே உண்மைக்குப் பொருந்தி வருவதாக இல்லை! ஆனால், அதே நேரம் உண்மையான காரணத்தை நாம் புரிந்து கொள்ளாமலும் இல்லை!

காங்கிரஸ் கோட்டை கலகலத்து விட்டது!

மாநிலமெங்கும் அதன் அமைப்பு 'மடமட' வென்று சரிந்து வருகிறது!

பார்த்தார்—பண்டிதர்!

காந்தியார்—காங்கிரஸ்காரர்களின் ஆத்மா புனிதமடைவதற்காக (அதனால் இதற்கு முன்பு அவர்கள் ஆத்மா புனிதமற்றுக் கிடந்தது—என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகிறது) அடிக்கடி உண்ணாவிரதம் இருப்பார்!

பண்டிதர் அவருடைய சீடரல்லவா? அதனால்தான் அதே வழியைக் கடைப் பிடிக்கிறார்!

இருந்தாலும் இவர் உண்ணாவிரதத்தின்மீது நம்பிக்கையில்லாதவர்!

எனவேதான் புதிய நாடகத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்—உள் கிறலை மறைப்பதற்காக!

ஒரு முறை; அல்லது இருமுறை—நாடகம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கலாம்!

ஆனால் நாடகம் அடிக்கடி நீடித்தால் மகத்துவம் கெட்டு விடும்; வசூல் குறைந்து விடும்; நாடகம் ஆடுவோரைத் தவிர பார்ப்பதற்கு வேறு ஆள் இல்லாத நிலை ஏற்பட்டு விடும்'

—நாடகமாடும் பண்டிதர் இதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும்! ஃ

தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாடு

திருவாரூரில் மே 10, 11 நாட்களில்!

பாரதத்தின் பெருமை— பல இலட்சம் பாழ்!

நேரு வந்தார் கேரளத்துக்கு! "மேருபோல் உயர்ந்து விட்டது காங்கிரஸ்! அது ஆட்டம் கண்டு வட்டது என்று சொல்லுவது அபத்தம்—பொருமை!" என்று சொல்லி விட்டுப் போனர்!

தேபர் வந்தார் தமிழகத்துக்கு! "அனல் தெறிக்கும் பேச்சு கேட்டு ஆபத்தை அணைக்காதீர்கள். பனிரெண்டு ஆண்டுகளாகக் காங்கிரஸ் சாதித்ததை வேறுயார் சாதிக்க முடியும்?" என்று மார்தட்டி விட்டுப் போனர்!

பரிதாபத்திற்குரிய இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி பீடம், தனது கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள, இப்படிப்பட்ட 'ஜால' வார்த்தைகளைத்தான் இன்றைய தினம் நம்பவேண்டிய கடைசி கட்டத்திற்குச் சென்று விட்டது!

"உலக அரங்கில் இந்தியா பெற்றிருக்கிற செல்வாக்கு வேறு எந்த நாடும் இதுவரை பெற்றதில்லை!" என்று பெருமையோடு பேசுகிறர் பந்த், காங்கிரசின் சிறுமை அதனுல் துடைக்கப்பட்டுவிடும் என்று கருதிக்கொண்டு!

உலக நாடுகள் இந்தியத் துணைக் கண்டத்துக்குத் தரும் மதிப்பு எதனுல்? அந்தக் கதையும் நாட்டு மக்கள் உணர்ந்தது தானே!

வெளி நாட்டுப் பிரதமர் யாராவது வருவார்; அல்லது அழைக்கப்படுவார்! மாலைகளுக் கிடையே சிக்கித் திணரவைப்பார்கள் நம்மவர்கள்! ஆயிரமாயிரம் பாட்டாளிகள் இரத்தத்தைச் சிந்தி வானளாவ கட்டியிருக்கும் கோபுரங்களைக் காட்டுவார்கள்; பாரதத்தின் புனித இடங்களைத் தரிசிக்கச் செய்வார்கள்!

"ஆகா! இதுவன்றே பாரத பூமி! புனித வழக்கங்கள் போற்றிப் பாதுகாக்கப்படும் பெரும் குணம் வாழ்க! வாழ்க!" என்று புகழ்ந்தவாறு திரும்பி விடுவார் அவர்!

"அடிமையாகக் கிடந்த நாடு இது—அறுபது ஆண்டு காலம் போராடிப் பெற்ற சுதந்திர நாட்டை இன்று சுதந்திர பூமியாக ஆக்கிவிட்டது பாரீர்! தொழில் விளையும் நிலமாக மாற்றிவிட்டது காணீர்!" என்று வடக்கே எழும்பி நிற்கும் பிரமாண்டமான 'புகைப் போக்கிகள்' சிலவற்றைக் காட்டுவார்கள்! கழுத்தை நீட்டி வளைத்துப் பார்த்தபின், "அடிமையாகக் கிடந்த நாடு எழுந்து நடமாடுகின்ற விந்தையே விந்தை!" என்று புகழ்ந்துவிட்டுப் போய் விடுகிறார்கள்!

மாதம் தவருது வருகின்ற இந்த விருந்தாளிகள் தருகின்ற விருதுகளைமட்டும் வைத்துக் கொண்டு நாட்டு மக்களிடையே காங்கிரஸின் உளுத்துப்போன செல்வாக்கை உறுதியாக்க முயல்வது வேடிக்கையான செயலாகும்!

நாடுகள் போற்றுவது இருக்கட்டும்—

ஏடுகள் சொல்லுவது என்ன?

—இப்படி தட்டிக் கேட்கத் துவங்கிவிட்டார்கள் மக்கள்! 'பாரத ரத்னு'க்கள் எப்படி ஆட்சிச் சக்கரத்தை உருட்டுகிறார்கள் என்று உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கி விட்டான், அந்தச்சக்கரம்அமைக்கானும் காலணு, அரையணுக்கள் தருகிறேனே—என்று கணக்கிட்டுப் பார்க்கத் துவங்கிவிட்ட பாமரன்!

அப்படிக் கேட்கத் துணிந்த போதுதான் பாரதத்தின் பெருமை— காங்கிரஸ் சர்க்காரின் காட்டு தர்பார்—நன்கு புலப்படுகிறது!

ஊழலின் பிறப்பிடமாக பித்தலாட்டத்தின் மறைவிடமாகத் தோன்றுகிறது காங்கிரஸ்!

மக்களின் வரிப்பணம் ஓட்டாஞ் சல்லிகளாக எண்ணப் பட்டு பாழாகிறது!

'பாரதத்தின் பெருமை இதுதான் பாரீர்!' என்ற இந்த இழிதகை உண்மைகளை ஆட்சி பீடத்தின் எதிர் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற எவரும் எடுத்துக் காட்டவில்லை!

டெல்லிமூலவர்களின் நிர்வாக இலட்சணம் பற்றிய இந்தச் சோகத்தொடர்கதையை நாட்டுமக்களின் முன்னல் ஏடுகளின் வாயிலாக எடுத்துவைக்கும் பொதுக் கணக்குத் தணிக்கைக் குழுதான் இப்போது நெஞ்சுஉலுக்கும் உண்மைகள் சிலவற்றை எடுத்துக்காட்டியிருக்கிறது!

★ தோடராத வழக்கு ஒன்றுக்காக, வழக்கறிஞர்களுக்கு ஒரு லட்சத்தைக்கோட்டிக்கோடுத்திருக்கின்றனர், காருண்யமுள்ள காந்தியவாதிகள்!

அன்னிய நாடு ஒன்றில் உள்ள இந்தியத் தூதுவராலுவலகம், 8,54,754 டாலருக்கு கோதுமை வாங்கி, கப்பல் ஒன்றில் ஏற்றி, இந்தியாவுக்கு அனுப்பியது. இதற்குக் கப்பல் கட்டணமாக 2,35,200 டாலர் கொடுக்கப்பட்டது. அனுப்பப்பட்ட சரக்கினை முறைப்படி இன்ஷ்யூர் செய்யவில்லை—தூதுவராலுவலகம்!

சரக்கு கப்பலில்வந்துகொண்டிருந்தபோது, நடுக் கடலில் கப்பல் தீப்பிடித்துக் கொண்டதால் கப்பல் மூழ்கியது. விளைவாக, 10,98,994 டாலர்—அதாவது சுமார் ரூ. 5 லட்சம் பாழாயிற்று. 'இன்ஷ்யூர்' செய்திருந்தால் இந்த நஷ்டம் ஏற்பட்டிருக்காது.

கப்பல் சொந்தக்காரர், நஷ்டத்தை ஈடுசெய்துதர மறுத்து விட்டார்.

ஏற்பட்ட நஷ்டம் போதாது என்று அந்த நாட்டிலே உள்ள இந்தியத் தூதுவராலுவ

[தொடர்ச்சி பக்கம்—9]

"இப்போது காங்கிரசிற்கு ஏற்பட்டிருக்கிற பலவீனம் தற்காலிகமானதுதான்; சமாளிக்கப் படக் கூடியதுதான்!" என்று கூறுகிறார் பண்டித நேரு —'சங்கர்ஸ் வீக்லி'

விடுதலை விருத்தம் பாடிட

சங்கமம்

சரசநாதன்

அதோ பாருங்கள்!

எங்கே? வான வெளியிலே வண்ண வித்தைகள் காட்டும் மாலைச் செங்கதிரையா? சிறகடித்துப் பறந்து செல்லும் பறவைக் கூட்டங்களையா? அல்லது, அதோ சிற்பியின் கைபடாமல் செதுக்காத சிலையாய் தென்றலில் ஆடியசையும் பூங்கொடி போல மென்னடை பயிலுகிருளே, அவளையா? பட்டையாக வாரிப் பின்னல் கொண்டையைத் தட்டையாகச் சுற்றி, சற்றே குழற் கற்றைகள் காற்றில் அலையும் தலையலங்காரம்; செம்மை படர்ந்த முகம்; 'லிப்ஸ்டிக்' உதவியால் சிவந்த மெல்லிதழ்கள்; தெளிந்த நீரோடையில் சலசலக்கும் மீனைப் போன்ற விழிகள்; துவளும் நடை! ஆகா! அவளது உடம்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் அந்த 'ஜாக்கெட்' தான் எவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது! அவளையா பார்க்கச் சொன்னாய்?

உங்கள் ஆராயும் திறன் அற்புதம்! வாழட்டும்; ஆனால் வளர வேண்டாம்! அலங்காரம் என்ற பெயரால் நடமாடும் இந்த அலங்கோலத்தையல்ல நான் பார்க்கச் சொல்லியது!

எதைத்தான் பார்க்கச் சொன்னாய்?

ஏனிப்படி அவசரப் படுகிறீர்கள்?

ஆவலைத் தூண்டிவிட்டால் வேறென்ன செய்வது?

தயவு செய்து உங்கள் நேரெதிர் நடை பாதையில் இருக்கும் அந்த மரத்தடியில்......அதற்குள் ஏன் உங்கள் முகம் இப்படிச் சுருங்குகிறது? அருவருப்பால் உதடுகள் எதையோ முணு முணுக்கின்றனவே! அருவருப்பை எறிந்துவிட்டு சற்று கவனியுங்கள்—எனக்காக.

உனக்கு வேறு வேலையில்லையா?

சரி, நானே சொல்லுகிறேன்; சுவைத்துப்போட்ட பனம்பழம் போல் செம்பட்டை பிடித்த மயிர்; எண்ணெய்க்கும் அந்தத் தலைக்கும் தொலைதூரம்! ஒளி மங்கி இருள் கவிந்து எலும்புக் குழிகளில் பரிதாபமாகச் சுழன்று கொண்டிருக்கும் விழிகள்! பட்ட மரம்போல் வற்றிய உடல்! அழுக்கேறிய பழுப்புக் கந்தை அங்கங்களை ஓரளவுக்கு மறைக்கப் பயன்படுகிறது! இந்த அழகில் அவள் இடுப்பில் உள்ள குழந்தை... குழந்தையா அது...?...

வேறு என்னவாம்?

ஓகோ, அவளைக் கவனிக்கிறீர்களா?

அது குழந்தை யென்றால் நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன்...வெறும் எலும்புக்கூடு! கண்காட்சி சாலைகளிலே, மருத்துவக் கல்லூரிகளிலே மாட்டி வைக்க வேண்டிய அழகான எலும்புக்கூடு! உயிர் உடலில் 'ஒட்டி'க் கொண்டிருக்கும் 'பாவ'த்தால் அவள் இடுப்பில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இல்லையென்றால் என்றோ அது மண்ணுக்குச் சுவையான விருந்தாகியிருக்கும்.

போதும் உன் சொற் சிலம்பம்; இந்த இலட்சணத்தைப் பார்க்கச் சொல்லி என்னை வேறு தொல்லைத் தெடுக்கிறாய்—என நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது.

அட...அவள் அங்கிருந்து நகருகிறாளே! உங்களிடம்தான் வருகிறாள்!

எதற்கு? ஏனிங்கே வந்து தொலைக்கிறாள்? ஒதுங்கிப் போகாதீர்கள். பொறுத்துப் பாருங்கள். இதோ, உங்கள் முன்னால் கையை நீட்டுகிறாளே! ... தெரிந்ததா எதற்கென்று?

இப்போது நீ சொல்லித்தான் தெரிய வேண்டுமா? அவள் ஒரு பிச்சைக்காரி.........பிச்சைக்குக் கையேந்துகிறாள்...

எப்படி ஐயா கண்டுபிடித்தீர்கள் இவ்வளவு பெரிய விஷயத்தை...?

"ஐயா! தர்மவான்களே! காலணா கொடுங்கள் ஐயா... பச்சைப் பிள்ளை பசியாலே துடிக்குது!..."

அது ஒன்றும் துடிக்கவுமில்லை; துவளவுமில்லை. இடுப்பில் கண்ணை மூடிக்கொண்டு ஆடாமல் அசையாமல் அவளைப் பிய்த்துப் பிடுங்காமல் செத்த பிணம்போல் கிடக்கிறதே!

"பசி தாள முடியவில்லை ஐயா!"

இன்னும் கொஞ்சம் உரக்கக் கேட்டால் அவளுக்கு உயிரா போய்விடும்?...உங்கள் கேள்வி எனக்கும்தான் கேட்கிறது!

நண்பரே...உங்களது அந்த வெறுப்பு அறிவைத் திரையிடுகிறது. உடலில் பலம் இருந்தாலதானே குரல் உரத்து ஒலிக்க? சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ! நடக்கக்கூட சக்தியில்லை ... எப்படி குரல் சுருதி ஏறும்?

பார்த்தீர்களா? முப்பது பேர் இருக்கும் இடத்தில் மூன்று காலணாக்கள் அவள் குவளையில் விழுந்திருக்கின்றன! ...முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் இந்த சென்னையில்தானய்யா பிறந்திருக்க வேண்டும்!...பெரிய தர்ம குணம் படைத்தவர்களய்யா!...

நீயேன் அவளுக்காகப் பரிதாபப் படுகிறாய்?...நீங்கள் வாய் விட்டுக் கேட்காவிட்டாலும் உங்கள் இதயம் பேசுவதை மறைக்க உங்கள் முகம் சக்தியற்றுப் போய்விட்டதே...

அவள் யார்...?

உடுக்க உடையின்றி, ஒண்டச் சாண் இடமின்றி, குடிக்கக் கூழுமின்றி, வயிறை வளர்க்க மானத்தை விட்டுப் பிறரிடம் பல்லைக்காட்டிக் கெஞ்சும் அந்தப் பரிதாபத்துக்குரியவள் யார்...?

பஞ்சத்தால் புயலில் சிக்கிய இலவம் பஞ்சைப்போலத் துடிக்கும் அவள் யார்?...

இதோ, அவளே பேசுகிறாள், கேளுங்கள்:

•

என்னையா கேட்கிறீர்கள், யார் என்று?

செய்யும் தொழிலனைத்திலும் சீர்தூக்கிப் பார்க்குங்கால் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை காண் என்ற உன்னதமான நெசவுத் தொழிலை—கற்கால மனிதனிலிருந்து தற்கால மனிதனை வேறுபடுத்திக் காட்டும் பல அம்சங்களில் ஒன்றான உடைத்துணியை உருவாக்கும் சீரிய பணியில் ஈடுபட்டிருந்தவள் ஐயா நான்! ஆமாம்... நான் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவள். அன்றைய நெசவாளி இன்றைய பிச்சைக்காரி! இரக்கம் கிஞ்சித்தும் இல்லாத பழிகார சமுதாயம் எனக்கு இந்தப் பட்டத்தைத்தான் தாராளமாக—கூலியெதுவுமில்லாமல்—அளித்தது.

என் குடும்பம் சேலத்திலிருந்தது! மனதிற்கிசைந்தவரை மணம் செய்துகொண்டேன். அவரும் நெசவாளியோ?...பின் என்ன? மாடி வீடு படைத்த செல்வச்சீமானாகவாயிருப்பான் என்று கேட்காதீர்கள். பெரிய மண்டி முதலாளியிடமிருந்து நூல் எடுத்து வந்து நெய்வார்; படாடோபமில்லாமல் குடும்பச் சகடத்தைச்சுற்றப்போதுமான வருமானம் வந்தது. நானும் அவர் உழைப்பில் பங்கு கொள்வேன். அவருக்காகத் தார் திரிப்பேன். ஆலை ஓட்டுவேன். அச்சு பிணைப்பேன். இராட்டினம் சுற்றி நூலிழைப்பேன். இன்னும் சொல்லப் போனால் தறி நெய்வேன். உங்களுக்கு வியப்பாயிருந்தால் அதை இன்னும் படர விடாதீர்கள். நெசவாளர் குடும்பங்களின் பெருமை ஆண்களின் உழைப்பில் பெண்களும் பங்கு கொள்வதில் தானய்யா நின்று ஒளிர்கிறது! பட்டணத்துப் பெண்களைப்போலப் பொழுதை கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ள நாடகங்களுக்கும் 'சினிமா'வுக்கும் போக மாட்டார்கள். மக்களுக்கு உதவாத மாதர் சங்கங்கள் அமைத்து 'அரட்டை'யடிக்க மாட்டார்கள். அலங்காரம் என்று சொல்லிக் கொண்டு அரை ஆடையுடன் ஊர் சுற்றக் கிளம்ப மாட்டார்கள். உனக்குப் படிப்புமில்லை; பாழுமில்லை; இவையெல்லாம் எப்படித் தெரியுமென்று கேட்கிறீர்களா ...?.....இதற்குப் படிப்பு வேண்டாம்...அனுபவம் போதும்! இன்று நானிருப்பது சென்னை மாநகரம் ஐயா!

உங்கள் குடும்பங்களில் பெண்கள் நிலை எப்படி என்று கேட்கிறீர்களா?......பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தைப் பக்குவமாக—சிக்கனமாகச் செலவு செய்யத் தெரிந்தவர்கள்! படிப்பில்லாமல் வெறும் அடுப்பூதிகளாக மட்டும் இல்லாமல் அழகாக நெய்யத் தெரிந்தவர்கள்!

என் கணவர் என்னை அடிக்கடி பாராட்டுவார், "செல்லம்! நான் நெய்வதைவிட உன் நெசவு எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா?" என்று. கணக்கற்ற முறை கேட்டிருக்கிறேன் இந்தப் பாராட்டு மொழிகளை!

கொஞ்ச காலத்திற்கு முன்பு வரை எங்கள் குடும்பம் வறுமையின் கோரப்பிடிக்குப் பலியாகாமல் பாவும் இழையும்போல், தறியும் நாடாவும்போல் பொலி

[தொடர்ச்சி பக்கம்—8]

திருவாரூர் மாநாட்டில்

கே. வி. கே. சாமி

உணவு விடுதி

★

மே 10, 11 தேதிகளில் நடைபெறும் திருவாரூர் தி. மு. க. மாநாட்டுப் பந்தலை யொட்டி மிகப் பெருந் திட்டத்தில் விருதுநகர் தோழர்களை கொண்டு ஏற்பாடு செய்யப்படும்

கே. வி. கே. சாமி உணவு விடுதிக்கு வருகை தந்து அறுசுவை உணவை அருந்தி மகிழ்வீர்!

உரிமையாளர்:
ஆர். கே. முத்துசாமி,
திருவாரூர்.

ஆரூர் அழைக்கிறது; வாரீர்!

"கீழத்தெருவைத் தாண்டி தூரத்திலே இடிந்து காணப்படும் ஒரு மண்டபத்தின் பக்கம் கண்ணன் நடந்துகொண்டிருந்தான். அந்த மண்டபத்தைத் தன அழுத்தமான வேர்க்கரங்களால் சுக்கல் சுக்கலாகப் பிளந்து வெற்றிச் சிரிப்பு சிரித்துக்கொண்டு நிற்கும் அரச மரமும், அதனை யொட்டி இடிந்தும் இடியாமலும் இருக்கிற பலிபீடமும் இரவு நேரங்களில் அந்தப் பக்கம் போவோர் வருவோரை பயமுறுத்துவதுண்டு.

"அந்தப் பலி பீடத்திலே பாயச முனி என்று ஒரு பயங்கரமான முனி வாசம் செய்கிறதாம். அந்த முனிக்கு காட்டேரியம்மன் என்று ஒரு வைப்பாட்டி உண்டாம். அந்தக் காட்டேரி, ரத்த வெறி பிடித்தவளாம். மனித ரத்தமென்றால் விடமாட்டாளாம்.

"ஒரு நாள் அவள் ரத்தப் பசி கொண்டு, ஆள் ஒருவரும் கிடைக்காமல் கடைசியாகத் தனக்குப் பூஜை செய்யும் பூசாரி முத்தண்ணனையே அடித்து ரத்தங் குடித்து விட்டாளாம். பலி பீடத்தின் முன்னேயே பிணமாகக் கிடந்த பூசாரியை மறுநாள் காலையிலே கண்ட ஊர் மக்கள் காட்டேரிமீதுதான் பழியைப் போட்டார்கள்.

"இரண்டொரு நாள் கழித்து சிலர் இப்படியும் பேசிக்கொண்டார்கள். அதாவது, பூசாரிக்கும் அடுத்த ஊரிலேயுள்ள ஒரு பயில்வானுக்கும் ஏதோ தகராறு! அந்த பயில்வான் பூசாரியைக் கொலை செய்து விடுகிறேன் என்று சபதம் போட்டான். பூசாரியும் எதிர் சபதம் போட்டார். ஒருநாள் பயில்வான் பூசாரியைக் கொல்வதற்காக கத்தியின் உதவியை நாடாமல் புத்தியின் உதவியை நாடி விட்டான். இரவு நேரத்தில், பூசாரி பலி பீடத்திற்கு பூஜை செய்துவிட்டுத்திரும்பும்போது, மண்டபத்திலேயிருந்து கருஞ்சேலை கட்டிய பயங்கர உருவமொன்று காலில் சதங்கை கட்டிக்கொண்டு "கோ!" என்று கூச்சலிட்டது. பூசாரி அலறினார். அவ்வளவுதான். மூக்கிலும் வாயிலும் ரத்தம் வழிந்தது. தீர்ந்து விட்டது மூச்சு! அடித்தோ குத்தியோ கொன்றால் கொலை வழக்காகி விடும்; இப்படிக் காட்டேரியின் பெயரால் கொன்று விடுவதே தனக்குப் பாதுகாப்பு என்று கருதிய அடுத்த ஊர்ப் பயில்வானின் நாடகம்தான் அது.

"அப்படிப்பட்ட காட்டேரியும், பாயச முனியும் வாழுகின்ற பாழ் மண்டபத்தை நோக்கித்தான் கண்ணன் நடந்தான். நானும் விடவில்லை. மறைந்து மறைந்து பின்னால் சென்றேன். பலிபீடத்தருகே போய் கண்ணன் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு கீழே உட்கார்ந்து பீடத்தின் கீழேயுள்ள கற்கள் இரண்டைப் பெயர்த்தான். சில நிமிஷ நேரம் ஏதோ வேலையில் ஈடுபட்டான். நான் நன்றாக ஒளிந்துகொண்டு நடப்பதை கவனித்தேன். பிறகு கண்ணன் அதை விட்டுப் புறப்பட்டான்.

"அவன் போனதும் பலி பீடத்தின் பக்கம் போய் உற்றுப் பார்த்தேன். கண்ணன் அங்கே சிறு குழி தோண்டி எதையோ புதைத்திருக்கிறான் எனக் கண்டு கொண்டேன். சந்தேகப்பட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்தேன். ஒரு பழைய தகடு—ஒரு மஞ்சள் துண்டு—சிறிய எலும்பு ஒன்று—இன்னும் ஏதேதோ குப்பைகள் இருந்தன. அவைகளை யெடுத்து வெகு தூரம் வீசியெறிந்தேன். குழியை முன் இருந்ததுபோல் வித்தியாசமில்லாமல் மூடி வைத்துவிட்டு, அவசர அவசரமாகக் கண்ணனைப் பின் தொடர்ந்தேன். அவன் தெற்கு வீதியைக் கடந்து காளவாய்க்கரைப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான். நானும் மெதுவாக அவனை விடாது தொடர்ந்தேன்.

"அங்கே ஓர் அய்யனார் கோயில்! மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். சபரிமலை அய்யப்ப சாமியின் சித்தப்பா பிள்ளையாம் அந்த ஊரிலே உள்ள அய்யனார் சாமி! அவருக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு பல பேர் குதிரைகள் செய்து கோயில் வாசலிலே நிறுத்தியிருந்தனர். குதிரைப்

பந்தயத்தில் மற்ற குதிரைகளை ஓட்டுகிற 'ஜாக்கி'களுக்கு லஞ்சம் கொடுத்துத் தன் குதிரையை ஜெயித்ததாக அறிவிக்கச் செய்து ஒரே சமயம் பத்து லட்ச ரூபாய் சம்பாதித்த பதஞ்சலிப் பிள்ளை என்ற சூதாடியொருவர் பஞ்ச கல்யாணிக் குதிரையொன்றை அந்தக் கோயில் வாசலில் பொம்மையாகச் செய்து வைத்து, பிரார்த்தனையை செலுத்திக்கொண்டார். அய்யனார், இரவு நேரங்களில் அந்த மண் குதிரைகள் ஒன்றில் ஏறிக்கொண்டு ஆற்றையெல்லாம் கடப்பாராம்.

"அப்படிப்பட்ட கோயில்வாசலில் உள்ள குதிரைகளில் ஒன்றின் காலுக்குக் கீழே கண்ணன், தன வேலையைத்தொடங்கினான். அவன் அதை விட்டுப் போனதும் நான் அதே இடத்தில் என் ஆராய்ச்சியை நடத்தினேன். பலிபீடத்தருகே இருந்தது போன்ற பழைய பொருள்களேதான்! அவைகளை யெடுத்து காளவாய் நெருப்பில் வீசிவிட்டு முன்போலக் குழியை மூடிவிட்டுத் திரும்பினேன.

"பின்னர், மேலத் திசையில் உள்ள ஒரு பாலத்தின் கீழே தன் வேலையை நடத்தினான் கண்ணன். நான் என் வேலையை நடத்தினேன்.

"கடைசியாக, வடக்குத்திசையில் வாய்க்கால் ஓரத்தில் வானுற ஓங்கி வளர்ந்திருக்கும் இரு கிளை முளைத்த தென்னை மரத்தடியில் கண்ணன் போய் அமர்ந்தான். நானும் சற்றுத் தொலைவிலிருந்து கவனித்தேன். அவன் கீழே குழி தோண்டுகிறானா என்று கவனித்தேன். பேசாமல் உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு எழுந்தான். எனக்கொன்றும் புரியவில்லை. மளமளவென்று தென்னை மரத்தில் ஏறினான். அடியிலேயே இருகிளையாய்ப் பிரிந்து வளர்ந்திருக்கும் அந்த மரத்தில் ஒரு கிளையில் ஏறி உச்சிக்குப் போனான். சிறிது நேரத்திற்குப் பிறகு கீழே இறங்கினான். தன் மடியிலிருந்து எதையோ எடுத்தான். மரத்தில் தடவினான். பிறகு போய் விட்டான். நான் புரிந்துகொண்டேன். தகட்டை மரத்தின் உச்சியில் மறைத்திருக்கிறான் என்பதை! என்ன செய்வதென்று புரியவில்லை. ஏனென்றால், எனக்கு மரம் ஏறத் தெரியாது. ஆழ்ந்த யோசனையுடன் மரத்திடம் சென்று கவனித்தேன். மடியிலிருந்து ஏதோ எடுத்து மரத்தில் தடவினானே; என்ன என்று பார்த்தேன். புரிந்து விட்டது. அவன் ஏறித் தகடு வைத்த கிளையைச் சரியாக அடையாளம் வைத்துக் கொள்வதற்காகக் கொஞ்சம் சுண்ணும்பு தடவியிருக்கிறான். ஈரத்துடனேயே அந்த சுண்ணும்பை விரலால் வழித்து அடுத்த கிளையில் தடவி விட்டு—முதலில் தடவப்பட்டிருந்த இடத்தில் சிறிதும் வெள்ளை தெரியாமல் அழித்து விட்டேன். பிறகு அவசர அவசரமாகக் கண்ணனைத் தொடர்ந்தேன்.

"அவன் பள்ளிக் கூடத்திற்குத் திரும்பி விட்டான். அவன் என்னைப் பார்த்து விடக் கூடாதே என்பதற்காக எப்படியெப்படியோ ஒளிந்து உள்ளே சென்றேன். அப்போதுதான் கண்ணன் நான் படுத்திருந்த இடத்திலே போய் நான் இல்லாததைக் கண்டு திரும்புகிறான். நானும் போய் விட்டேன். 'எங்க வாத்தியாரே போனீங்க? தூக்கமே வர மாட்டேன்னுது...நீங்க தூங்காம இருநதால் பேசிகிட்டு இருக்கலாம்னு வந்தேன்' என்று சமாளித்தான் கண்ணன்.

"நானும் அவனை விட ஒரு படி அதிகமாகவே போய், 'அப்படியா சேதி! நான் ஆனந்தமாகத் தூங்கினேன். இப்பத்தான் தெருப்பக்கம எழுந்து போனேன்...அந்த சமயத்தில் நீ என்னை எழுப்ப வந்திருக்கிறாய்!' என்று ஒரு பொய்யை மெய்யாக்கினேன்.

"பிறகு இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். 'இந்த ஊரில் கிளை முளைத்த தென்னைமரம் இருக்குதாமே?' என்று தெரியாதவனைப் போலக் கேட்டான் கண்

திராவிடத் தரணி காண
திருவாரூர் திரளுவீர்!

ணன். நானும் அவனைப் புரிந்து கொள்ளாதவனைப் போல 'ஆமாம் — ஆச்சரியமான தென்னைமரம் அது! அந்தத் தேங்காய்கள்கூட எல்லாக் காய்களையும்விட அதிக விலை!' என்று கூறினேன்.

"'இந்த ஊர்லே எவ்வளவு நாளா இப்படிக் கஷ்டமாயிருக்கு?' என்று அடுத்தபடியாகக் கேட்டான்.

"'கஷ்டமா? என்ன கஷ்டம்? யாருக்கு?' என்றேன்.

"'அதான் ஊரிலே நோய், நொடி, சாக்காடு — வறுமை சிறுமை — இப்படி யெல்லாம் இருக்கே—அது எத்தனை நாளா இருக்குன்னு கேக்கிறேன்' என்று விசாரித்தான் கண்ணன். 'அது பல நாளாய் இருக்கு!' என்று அலட்சியமாகச் சொன்னேன் நான்.

"'நாளையிலிருந்து இந்த ஊரைப் பிடிச்ச பீடை தொலையுது!' என்றான்.

"'ஏன், நீ ஊருக்குப் போகிறாயோ?' என்றேன். அந்தக் கிண்டலை அவன் புரிந்து கொள்ளவில்லை. தகடு எடுக்கப் போகிறேன்; தகடு!' என்றான் கம்பீரமாக! நேரம் அதிகமாகி விட்டது. சிறிது நேரம் தூங்கலாம் என்று விடியற்காலை கண்ணை மூடினோம்.

"மறுநாள், ஊரே ஒரே அமர்க்களப்பட்டது. கரகமாடிக் கண்ணன், மலையாள மாந்திரிகன் புதைத்த தகட்டை எடுக்கப் போகிறான் என்ற சேதி, காட்டுத் தீ போல் பரவிவிட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் அந்தச் சிறிய கிராமத்தில் கூடிவிட்டார்கள். கரக ஆட்டத்திற்கு வந்ததை விட நாலு மடங்கு அதிகமான கூட்டம்! எல்லோரும் பீதியோடும் வியப்போடும் தகடு எடுக்கும் சம்பவம்பற்றி பேசிக் கொண்டார்கள். தகடு எடுக்கும்போது மலையாள தேவதை அதிக பலத்தோடு சண்டை போட்டு கண்ணன் விடும் தேவதையை விரட்டிவிட்டால் அதே இடத்தில் கண்ணன் சாக வேண்டியதுதான்—வாயாலும் மூக்காலும் ரத்தங் கொட்டிப் பிணமாகி விடுவான்; பாபம்— என்றெல்லாம் அனுதாப உணர்ச்சியோடு குழுமினர். 'பாவம்—அழகான வாலிபன்! இவனுக்கேன் இப்படிப்பட்ட துணிச்சல்? இவன் ஏன் மலையாள தேவதையிடம் தன் கைவரிசையைக் காட்டப்போகிறான்?' என்று செல்லமாகக் கண்டனம் தெரிவித்துக் கூறினர் பலர்.

"காலையில் கண்ணன் நன்றாகக் குளித்து முழுகி, உடம்பெல்லாம் சந்தனம் பூசி, அகலமான குங்குமப் பொட்டு ஒன்றை நெற்றியிலே இட்டு, செவ்வந்திப்பூ மாலையொன்றைக் கழுத்திலே குறுக்கே போட்டுக் கொண்டு, ஒரு கட்டை வண்டியிலே ஏறி நின்று கொண்டான். வண்டியும் அழகாகச் சிங்காரிக்கப்பட்டு, வாழைக் கன்றுகள் சுற்றிலும் சட்டப்பட்டு, சாம்பிராணி தூபம் புகையை எங்கும் பரப்பிட, காண்பவரைக் கவரும் வகையில் ஏற்பாடாகி யிருந்தது. தாரை, தப்பட்டை, கொம்பு முதலிய வாத்தியங்கள் முழங்க கரகமாடிக் கண்ணன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டான். அவன் கண்களை மூடிக்கொண்டு, கையை உயரத் தூக்கி 'ஹே காளிகா தேவி! மாரியம்மா! தாயே! சக்தீ! சக்தீ!' என்று கத்திக் கொண்டே வந்தான். அந்த வேடத்தைக் கண்டு யாருமே ஏமாந்து விடுவார்கள்.

"'அதோ...கீழத்தெரு பாயச முனி மண்டபத்துக்கு விடு!' என்று கூச்சலிட்டான்! வண்டி, மண்டபத்திற்குச் சென்றது. 'இதோ! இந்தப் பலிபீடத்துக்குக் கீழேதான் மலையாள மாந்திரீகன் முதல் தகட்டைப் புதைத்திருக்கிறான் — ஹே... காளி! ஹே மாரீ! உன் சக்தியால் அந்தத் தகட்டை எடுத்துத் தூளாக்குகிறேன் பார்!' என்று பலிபீடத்துக்குக் கீழே பரபரவென்று தோண்டினான். அங்கேதான் தகடு இல்லையே... அதைத்தான் நான் அப்போதே எடுத்து விட்டேனே......"

என்று அறவாழி, புன்னகையோடு பூஞ்சோலையிடம் கூறிக் கொண்டே பொன்மணி பக்கம் திரும்பினான். அவள் சிலையாக இருந்தாள். சிலை, சிரிக்குமா? இந்தக் கேள்வி அறவாழியைக் குடைந்தது!

"ம்...அப்புறம்? ...கண்ணன், நாலு திசையிலும் தேடிப் பாத்து ஏமாந்துட்டானா? அடபாபமே! நீங்க ரொம்ப குறும்புக்காரப் புள்ளை தம்பி...அப்பறம் என்ன நடந்துச்சு? சொல்லுங்க?" என்று பூஞ்சோலை கேட்டாள்.

அறவாழி, பதில் சொன்னான்....

"எல்லா இடங்களிலும் கண்ணன் ஏமாந்து, அவனை நம்பிய மக்களும் ஏமாந்து, இறுதியில் கிளை முளைத்த தென்னை மரப் பக்கம் வந்தார்கள். கண்ணன் தானிட்டிருந்த அடையாளத்தைக் கவனித்தான். அது மாற்றப்பட்டது அவனுக்கு எப்படித் தெரியும்? பாவம்—மளமளவென்று ஏறினான். அய்யோ, பரிதாபம்—ஏமாற்றத்தோடு திரும்பினான். கூட்டத்தில் பலவகையான பேச்சுக்கள்! கண்ணனின் தலை தானாகவே குனிந்து கொண்டது. இருந்தாலும் தந்திரத்தை விடவில்லை...ஆவேசம் பிடித்தது போல் முரட்டுத்தனமாகப் பல்லைக் கடித்துக் கொண்டு கத்தினான். 'ஹே மலையாளபகவதீ! நீ என்னை ஏமாற்ற முடியாது! இருக்கட்டும்—நாளை காலையிலே உன் கொட்டத்தை அடக்குகிறேன்...' என்று சபதம் செய்தான்.

"உடனே, நான் குறுக்கிட்டு, 'நான் இப்போதே உன் கொட்டத்தை அடக்குகிறேன்!' என்று கூறினேன். கண்ணன் உட்பட அனைவரும் என்னையே அதிசயமாக நோக்கினர்.

"முதல் நாள் இரவு நடந்த ரகசியம் முழுவதையும் எல்லோர் முன்னிலையிலும் விளக்கினேன். கண்ணன் தகடு வைத்திருந்த சரியான கிளையைக் காட்டி 'இதோ இந்தக் கிளையில் இருக்கிறது; தகடு! எடுங்கள்!' என்றேன்.

"ஒருவன், மரத்திலேறி நான் சொன்னபடி தகட்டை எடுத்து வந்தான். ஊரார் கோபம் கண்ணன்மீது திரும்பியது. அவனை அங்கேயே அடித்துக் கொன்றிருப்பார்கள் நான் மாத்திரம் தடுக்காவிட்டால்! கடைசியாக, தகடு எடுக்கும் விழா பார்க்க வந்த பொது மக்கள் என்னுடைய பிரசங்கத்தைக் கேட்டு வீடு திரும்பினார்கள்.

"கண்ணன், என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு அதை விட்டு அகன்றான். அந்தப் பார்வையின் அர்த்தம் 'பழிக்குப் பழி!' என்பதுதான்! எனக்கு சிற்றூருக்குமாற்றல் ஆனதுமே, கண்ணனின் ஞாபகம்தான் வந்தது. அதோடு, அவனுடைய பார்வையின் நினைவும் எழுந்தது. இருப்பினும் பரவாயில்லையென்று புறப்பட்டேன். ஊரை விட்டுப் புறப்பட்ட நான்—ரயில், கார் முதலிய வாகனங்களைக் கடந்து கடைசியில் கட்டை வண்டி யொன்றில் ஏறி ஊருக்குள் வந்து கொண்டிருந்தேன். இரவெல்லாம் ஒரே பிரயாணக் களைப்பு—விடியற்காலை நாலு மணிக்குத்தான் இந்த ஊரை அடைய முடியும் என்று திட்டமிட்டு என் பயணம் துவங்கியது. அதன்படி ஊருக்குள் நுழைந்தேன். ஊர் கோடியில்வண்டி மாடுகள் படுத்துக்கொண்டு எழவே முடியாதென மறுத்து விட்டன. பிறகு வண்டிக்காரனுக்கு கூலியைக் கொடுத்து விட்டு பெட்டி, படுக்கைகளை நானே தூக்கிக் கொண்டு நடந்தே வந்து கொண்டிருந்தேன்.

"அப்போதுதான் திடீரென கண்ணனை சந்திக்க நேர்ந்தது! ...கண்ணனை மட்டுமல்ல...கண்ணனின் 'உதவி'யால்......உங்களைப் போன்ற நல்லவர்களையும்......" என்று பேச்சை இழுத்து இழுத்து நிறுத்த முடியாமல் விழிகளை மட்டும் பொன்மணியின் பக்கம் விடுத்தான் அறவாழி!

தொடரும்

கக்கன் வளர்ந்தார்; சமூகம் உயர்ந்ததா?

"ஆதித்திராவிட சமூகத்தைச் சேர்ந்த கக்கனோ, மீனவர் வகுப்பைச் சேர்ந்த லூர்தம்மாளோ மந்திரிகளாகிவிட்டதனால் மட்டுமே தாழ்த்தப்பட்ட சமுதாயம் முன்னேறிவிடாது.

"குடிசைமீது ஒரு சேவல் ஏறி நின்று கூவுகிறது என்றால், அதைப் புகைப்படமெடுத்துப் பார்த்தால் மிக அழகாகத்தானிருக்கும். அருவியின் ஓரத்திலே இருக்கும் குடிசையும், அந்தக்குடிசையின்மீது நிற்கும் கோழியும், அதன் கொண்டையும், அது கூவும் அழகும், படமெடுத்துப்பார்க்க மிக எழில் நிரம்பிய காட்சியாகத்தானிருக்கும்; ஆனால், குடிசைவாழ்வோரின் அல்லல் அதனாலே தீர்ந்துவிடாது!

அதைப் போலத்தான், 'கக்கன் மந்திரியானதைப் பாருங்கள்' என்று மக்களிடையே சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுவதிலே அர்த்தமில்லை. அல்லலுறும் பாட்டாளிச் சமுதாயத்துக்குக் கிடைக்கும் ஊதியம் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய அளவாகவாவது இருக்கிறதா என்றால், இல்லை! அதைப்பற்றி ஆட்சியாளருக்கு அக்கறையுமில்லை!

கக்கன் மந்திரியானதைப் பற்றி எனக்குமெத்தமகிழ்ச்சிதான். ஆனால் எல்லோரும் மந்திரியாக வந்துவிட முடியுமா? முதலில் படிக்க வைக்க அந்த சமுதாயத்துக்கு வசதியுண்டா? பரம்பரை பரம்பரையாக உழைத்துப் பிழைக்கும் பாட்டாளிக் குடும்பத்திலிருக்கும் பிள்ளைகள் எப்படிப் படித்துப் பதவிக்கு வர முடியும்?

—அறிஞர் அண்ணா

பன்னீர்ச்செல்வம் பந்தலில்
இன முரசு கொட்டுவோம்!

சங்கமம்...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

வுடன் இன்பமாக இழைந்தது. இல்லற வாழ்வின் இன்பப் பிரதி பிம்பமாக மகிழ்ச்சியை அதிகரிக்க எங்கள் மனையில் மழலைச் செல்வம் தவழ்ந்தது. எங்கள் மகிழ்ச்சி இன்பத்தின் எல்லைக் கோட்டில் நின்று ஆனந்த நர்த்தனம் புரிந்தது. ஆனந்தத்தைக் குறைவில்லாமல் கூட்டிய அந்த மழலைச் செல்வம்தான் இந்தக் குழந்தை.........என்ன திகைக்கிறீர்கள்?......உயிர் ஒட்டிக் கொண்டு ஊசலாடும் இந்த எலும்புக் 'கூடா' உங்கள் மகிழ்ச்சியை அதிகரித்தது என்று கேட்கிறீர்களா? ஆமாம்; நிச்சயமாக இந்தச் செல்வன் தான்!

சீராக வாழ்ந்த எங்கள் குடும்பம் சீரழிந்தது. ஊரெல்லாம், நாடெல்லாம் பரவிய பஞ்சத்தால் அதன் இரக்கமற்ற கோரப் பிடியில் எங்கள் குடும்பமும் சிக்கியது. ஏராளமாகச் செலவிட்டு நெய்த சேலைகள் வாங்குவாரின்றி கடையில் தேங்க ஆரம்பித்துவிட்டன. 'அவர்' வேலை செய்து வந்த முதலாளி கடையைக் கட்டிவிட்டு சென்னையை நோக்கி நடையைத் திருப்பிவிட்டார். அவருக்கென்ன? பல வழிகளில் பணம் புரட்டும் பெரிய முதலாளி! கவலையில்லாமல் போய்விட்டார். பல இடங்களில் அலைந்தார் என் கணவர்; பலன் எதிர்பார்த்ததுதான். வேலையின்மையால் ஏற்படும் இன்னல்கள் உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ! நாங்கள் முழு அளவுக்கும் மேல் அதை அனுபவித்தோம். வீட்டிலிருந்த தறி சாமான்கள் ஒன்றன் பின் ஒன்றாக மறைய ஆரம்பித்தன. ஒருநாள் 'அவரும்' மறைந்துவிட்டார்—இந்த உலகத்தைவிட்டே போய்விட்டார். பிரிக்க முடியாத சிக்கலைக்கொண்ட 'பாவை'ப்போல் ஆகித் தவித்தோம் நானும் என் செல்வனும்.

செய்யும் தொழிலில் எங்களுக் கேடில்லை என்றிருந்த நெசவாளர் நிலை தேயும் திங்களைப்போல் ஆகிவிட்டது. வளர் பிறையாக நிலை மாறும் என்ற நம்பிக்கை யாருக்கும் இடையாது. என்றோ அந்த நப்பாசையும் அற்றுப் போய்விட்டது. செய்யும் தொழிலே இதுவரை நெசவாளர்களை உயவித்து வந்தது. ஆனால் இப்போதோ செய்வதறியாமல் திகைத்தனர். கஞ்சிக்காக—கால் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்காக பிறரிடம் கெஞ்ச வேண்டியதாகி விட்டது. நாதியற்றவர்களைப்போல் வீதி வீதியாக அலையும் காலம் கடுகி வந்து சேர்ந்தது; எனக்கும் சேர்த்துத்தான்!

வீட்டைக் கடன்காரன் இரக்கமின்றி வன்னெஞ்சத்துடன் பறித்துக்கொண்டு எங்களை விரட்டிவிட்டான். வாழவகையொன்றும் காணமல், விழியிலே கண்ணீர் கொப்பளிக்க வீட்டைவிட்டு வெளியேறினேன். மானத்தோடு வாழ்ந்த நான் இப்போது அதைக் காற்றில் கரையவிட்டு தானம் கேட்க வேண்டிய நிலை; துணிந்து பிச்சையெடுக்கும் ஈனத் தொழிலில் ஈடுபட்டு விட்டேன்! கேடுகெட்ட, புரையோடிப்போன மனித சமுதாயம் எனக்குக் காட்டிய கடைசி வழியும், ஒரே வழியும் அது தான்!

நாதியற்று நடுத் தெருவில் நிற்பவள்தானே என்று என் மீது காமக் கணை தொடுத்தனர் சண்டாளத் தூர்த்தர்கள். காமப் பசியைக் காறி உமிழும் அந்தக் கொடூரப்பார்வையாளர்களிடமிருந்து நான் தூர விலகியோடினேன். உலகத்தில் ஏழையாகவே பிறக்கக்கூடாது. ஏழையாகப் பிறந்தாலும் அழகாகப் பிறக்கக்கூடாது. பழிகார சமுதாயம் வாழ வழி செய்து கொடுக்கவில்லையென்றாலும் வகை கெட்ட பிறகாவது சும்மாவிட வேண்டாமா...?

பல சமயங்களில் குப்பைத் தொட்டிகளில் எச்சல் இலைகளுக்காக நாய்களுடன் போட்டியிட்டிருக்கிறேன். பல வேளைகளில் அதிலும் எனக்குத் தோல்விதான் பரிசாகக் கிடைத்தது. உறுமிக் கொண்டு பாயும் நாய்கள்கூட என்னை விரட்டிவிடும். அப்போதெல்லாம் குழாய்த் தண்ணீர்தான் பசியால் வாடிக் கொண்டிருக்கும் என் வயிற்றை நிரப்ப உதவும் ...அறுசுவை உணவைத் தேடி நான் அலையவில்லை......அரை வயிற்றை நிரப்பிக் கொள்ள கூழ் கிடைத்தால் திருப்தி அடைந்திருப்பேன். ஆனால் அதுகூட கிடைக்கவில்லை. தண்ணீர்தான் கிடைத்தது...வயிற்றையே தண்ணீரால் நிரப்பித் திருப்தியடையும் நிலை. இந்த அழகில் ஒண்டிக் கொள்ள இடம் தேடி நானும் என் செல்வனும் எங்கே போவோம்?

ஒருநாள் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தேன். அந்த வீட்டுக்காரர் இரக்க சுபாவமுள்ளவர்! ஆனால் சந்தேகப் பிராணி! என்மேல் தண்ணீரைக் கொண்டு வந்து கொட்டாதது அவருடைய இரக்க சிந்தையைக் காட்டியது. அடுத்தாற்போல் பேசிய சொற்கள் அவருடைய சந்தேகக் குணநலத்தைக் காட்டின.

''ஏய்! அசந்திருக்கும் சமயமாப் பார்த்து ஏதாச்சும் சுருட்டிகிட்டுப் போயிடலாமுன்னு பாக்கறியா? போ, போ! ...எழுந்து ஓடு!'' என்று விரட்டினார் அந்தப் புண்ணியவான், இரவு பனிரெண்டு மணிக்கு மேல்.

நடை பாதை யோரத்தில் என் செல்வனை அணைத்துக் கொண்டு படுத்திருப்பேன் இன்னொரு நாள்!

'' எழுந்திரு ! இங்கெல்லாம் படுக்கக்கூடாது!'' என்ற சிம்ம கர்ச்சனை போன்ற குரல்கேட்டு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருப்பேன். அலங்கோலமான நிலையில் எதிரே கொடூரமாக விழித்துக்கொண்டு எமகிங்கரனைப்போலக் காட்சியளிப்பான் ஒரு போலீசுக்காரன்.

ஓடுகின்ற நாயைக் கண்டால் விரட்டுகின்ற நாய்க்குக் கொண்டாட்டம்! கெஞ்சலான பணிவு வீண் கர்வத்தைக் கிளப்பிவிடும் தூண்டுகோல்! போலீசுக்காரன் உச்சாணிக்கொம்பில் ஏறிக் கொண்டு கோபக் கூத்தாடுவான்.

''இது என்ன உன் அப்பன் போட்ட ரோட்டா? இருக்க இடமில்லைன்னா குளம் குட்டை, அதுவுமில்லேன்னா கடலைப் பாக்கறதுதானே!'' என்று கத்துவான். கொலையையும் தற்கொலையையும் தடுத்து நிறுத்தவேண்டிய அந்தச் சட்டத்தின் பிரதிநிதி எனக்குச் சாவதற்கு வழி சொல்லித் தந்தான். வேலியே பயிரை மேய்ந்த கதையாக சட்டம் அவனிடம் கண்களை மூடிக்கொண்டு விட்டது.

அவனிடமிருந்து தப்புவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். நன்றி கிஞ்சித்தும் இல்லாத மனிதர்கள் நிறைந்த இந்த சமூகத்தின் நச்சு நோக்கிலிருந்து ஒரேயடியாகத் தப்பி ஓடிவிடத்தான் தினமும் முயற்சிக்கிறேன். முயற்சி முளையிலே கிள்ளப்பட்டு வாடிப்போகிறது! இந்த நிலையில் எப்படித்தான் என் வாழ்வு விடியப் போகிறதோ?

●

அதற்குமேல் அவள் பேச முடியாது தவிக்கிறாளே; மற்றதை நானேதான் சொல்கிறேனே; அவள் வாழ்வு விடியுமா என்று கதறினாள். ஒரு நாள்...

விடிந்தது !

துன்ப இருள் நீங்கி அவள் வாழ்வு ஒன்றும் விடிந்து விடவில்லை!

பொழுதுதான் விடிந்தது !

அதோ, அந்த வீட்டின் முன்னால் ஏக்கத்தோடு நின்று கொண்டிருக்கிறாள் அவள். வீட்டுக் குழந்தைகள் அவள் முன் கரும்புத் துண்டொன்றை நீட்டுகின்றனர். ஆவலோடு அருகில் போகிறாள். அவர்களோ அவளுக்குப் ''பே, பே'' காட்டி விட்டுத் திண்ணைமேல் உட்கார்ந்து கொண்டனர்.

அவள் முகம் துக்கத்தால் கருமை பூசிக்கொண்டது. சிறுவர் முகங்கள் களிப்பால் ஒளி விட்டன. கை கொட்டிச் சிரித்தார்கள். ''போ, போ'' வென்று விரட்டத் தொடங்கிவிட்டார்கள்.

விம்மினாள். சிறுவர்களின் கேலிக்காக அவள் விம்மவில்லை ...அவளும் ஒரு தாய்! தாய்மையின் பரிவு, பிச்சைக்காரியாக மாறிவிட்டாலும் அவளைவிட்டு நீங்கி விடவில்லை. கள்ளமில்லா பிஞ்சு நெஞ்சங்களை அவளும் அறிவாள். விழியிலே பொங்கும் கண்ணீரின் சூடு தாங்காமல் உள்ளத்தில் தொடர்ந்து பொங்கி எழுகின்றனவே துன்ப அலைகள் அவைதான் இன்று அவளுக்குப் பொங்கல்; பெரும் பொங்கல்!

இப்போது அவள் முகம் உறுதியாக மாறியது.

நடந்தாள். விரைந்தாள். ஓடினாள்.

எங்கே அப்படி ஓடுகிறாள்?...

அதோ, எல்லையற்றுப் பரந்து கிடக்கும் நீலக்கடல் தெரிகிறது. கரையில் அவள் நின்று கொண்டிருப்பது தெரிகிறதா?

அவள் உதடுகள் அசைகின்றன. என்னபேசுகிறாள்; கேட்கவில்லையா? கூர்ந்து கவனியுங்கள்:

''வா, வா என்று இவ்வளவு ஆர்ப்பாட்டத்தோடு பாசத்தைக் காட்டி என்னை யாரும் அழைத்ததில்லை, கடலே! கடைசி புகலிடமே!...இந்த சமுதாயத்தில் பிச்சைக்காரியென்றும் கதியற்றவளென்றும் துரத்தியடிக்கப்பட்டு உன் மடி மீது துயில வந்திருக்கிறேன். இந்த உலகில் நான்பட்ட துன்பமும் துயரும், இன்னலும் இடரும் போதும்! கெட்டழிந்தது எங்கள் குடும்பம்! நிலை தடுமாறிய ஏழைக் குடும்பத்தின் கடைசி பலி இதோ நான் நிற்கிறேன். ஏற்றுக்கொள். ஆனால் என் சிறிய செல்வனை உன் கோரப் பசிக்கு இரையாக்க மாட்டேன். அவனை உயிரோடு விட்டுச் சென்றால் அனாதை விடுதியிலாவது வளர்த்து ஆளாக்க மாட்டார்களா?... அதற்குள் ஏனிப்படி அவசரக் கோலத்துடன் ஆர்ப்பரிக்கிறாய்? என்னை ஆசையுடன் வாவென்றழைக்கிறாய்!...இதோ வருகிறேன்...உனக்குத் திருப்தி தானே இப்போது...?''

என்ன? கேட்டதா?

அதோ, அவள் உடல் கடல் அலைகளுக் கிடையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

கரையில் அவள் விட்டுச் சென்ற செல்வன் பசியால் கதறிக்கொண்டிருக்கிறான்!

எங்கும் கலகலப்பை ஊட்டிக்கொண்டு காலைக் கதிரவன் கீழ் வானத்தில் எழுந்துகொண்டிருக்கிறான்.

ஆனால் கடற்கரையில் அவள் விட்டுச் சென்ற குழந்தையைப் பாருங்கள்......

ஏன் திடுக்கிடுகிறீர்கள்?

பெரியவர்களால்கூட தாங்க முடியாத குளிரை இந்தக் குழந்தையால் தாங்க முடியுமா?... இரவு உலகத்தை நடுக்கிய குளிர் குழந்தையின் உடலையும் உயிரையும் பிரித்துவிட்டது!

அம்மா இருக்குமிடம்தானே பிள்ளைக்குச் 'சொர்க்கம்!'

●

முரசொலி
சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

[சந்தாத்தொகையை மணியார்டர் மூலமோ, கிராஸ் செய்த இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பலாம். இலங்கை, மலேயா போன்ற இடத்திலிருந்து கிராஸ் செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போது தவறாது சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டும்.]

அடிமை விலங்கினை ஒடித்திட

தான் காங்கிரஸ் தலைமைப் பதவியைக் கைவிடப் போவதாக தேபர் சொல்லிக் கொண்டிருக்கிறார்!
— சங்கர்ஸ் வீக்லி'

பாரதத்தின் பெருமை..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லகம், கப்பலுக்குச் சொந்தக் காரரான அந்த நாட்டு சர்க்கார் மீது வழக்கு ஒன்று தொடுப்பது என முடிவு செய்து, வழக்கினை ஒரு வழக்கறிஞர்குழுவிடம் ஒப்படைத்தது. ஆனால் அந்த வழக்கறிஞர்களுக்கு எவ்வளவு 'பீஸ்' கொடுப்பது என முடிவு செய்துகொள்ளவில்லை.

முதலில் 5,000 டாலர் தந்தார்களாம். பின்னர், டெல்லியில் உள்ள உணவு விவசாய இலாகாவினர் வழக்கிற்கு மொத்தம் எவ்வளவு செலவாகும் என்ற விபரங்களைத் தருமாறு தூதுவராலயத்தைக் கேட்டனராம். அதன்பேரில், தூதுவராலயம் ஏற்பாடு செய்த வழக்கறிஞர்களைக் கேட்டதற்கு அவர்கள், '75.000 முதல் 3,63.328 டாலர்வரை தேவை' என்று கூறினராம். பின்னர் அந்த வழக்கறிஞர்கள் ஏற்கனவே முன்பணமாகத் தந்த 5000 டாலர் போதுமானதல்லவென்றும், மேலும் 25.000 டாலர் வேண்டுமென்றும் கேட்டுப் பெற்றுக்கொண்டனராம்.

அதன் பிறகுதான் வேறு வழக்கறிஞர்களைக் கலந்தாலோசிக்குமாறு டெல்லி உணவு இலாக்கா தூதுவராலயத்தைக் கேட்டதாம். அப்படிக் கேட்டபோது இதர வழக்கறிஞர்கள், 'வழக்குத் தொடருவதால் பலன் இல்லை' என்றனராம்!

அதன்பேரில் வழக்குத்தொடரும் முயற்சி கைவிடப்பட்டதாம்!

இதனால் தொடராத வழக்கிற்காக 25,000 டாலர்வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

கோதுமையை இன்ஷ்யூர் செய்து அனுப்பாததால் வேறு 10,89,984 டாலர் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

நாட்டு மக்களுடைய ஒவ்வொரு துளி வியர்வையும் பெற்றெடுத்த வரித் தொகை. இப்படி வெளிநாட்டு வழக்கறிஞர்களுக்கு 'இனாமாக'த் தரப்பட்டு விட்ட பயங்கர உண்மையை மட்டும் அந்தக் குழு தெரிவிக்கவில்லை! மேலும்...

★★ சர்க்காருக்குச் சொந்தமான அசோகா ஓட்டல் கட்டியதில் மாபெரும் ஊழல்கள்—இலட்சக் கணக்கான ரூபாய் கொள்ளை போய்விட்டது!

வெளிநாட்டு விருந்தினர்களை உபசரிக்கவும்—விருந்து வேடிக்கைகள்; கோலாகல கேளிக்கைகள் இவைகளை அனுபவிப்பதில் நமது ஆட்சியினர் பழங்கால ரோமானிய மன்னர்களுக்கு கொஞ்சமும் சளைத்தவர்களல்ல என்பதை நிலைநாட்டவும், பல கோடி ரூபாய் செலவில் ஓர் அழகான ஓட்டலை நிர்மாணித்திருக்கிறார்கள், இந்திய அரசியலார்!

அதைக் கட்டி முடிக்க ஆன செலவுகளில் ஐந்து இலட்சம் ரூபாய் பாழான உண்மை இப்போது வெளியாகி இருக்கிறது!

ஓட்டலைக் கட்டுவதற்காக நியமிக்கப்பட்ட காண்ட்ராக்டருக்கு—அவர் 'தேவை' என்று கை நீட்டிய போதெல்லாம் 'காமதேனு'வைப்போல டில்லி கஜானா திறந்து கொண்டதாம்! "கொடுத்த பணத்திற்கு செய்து முடித்த வேலை என்ன?" என்று அந்த வடநாட்டுக் கம்பெனியை அதட்டிக் கேட்க ஒரு ஆள்கூட இல்லை, பல்லாயிரக் கணக்கான அதிகாரிகளைக் கொண்டிருக்கும் டில்லி மூல பீடத்தில்!

"இந்தக் கேவலமான செயலைக் கடைப் பிடித்து வந்தது விதிமுறைகளுக்கு விரோதமானது!" என்று வேதனையோடு விளக்கம் தருகிறது, தணிக்கைக் குழு!

இப்படிக் கவனக் குறைவாக நினைத்த நேரத்திலெல்லாம் பணத்தை வாரி வழங்கிய 'கொடைத் தன்மை' முடை நாற்றம் எடுக்கும் அளவில் பல இலட்சங்களை விழுங்கி யிருக்கிறது!

இது தவிர...

ஒவ்வொரு வேலைக்கும் தனியாகப் பேசப்பட்ட தொகையை விட அதிகமாகக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்! இப்படி மூன்று வேலைகளுக்காக மட்டும் அதிகமாகக் கொடுத்துவிட்ட தொகை 7,03,832 ரூபாயாம்!

இந்த சோகத் தொடர் கதையின் அடுத்த அத்தியாயம்...

★★★ அகதிகளின் அவல நிலை கண்டு கண்ணீர் உகுத்த மத்திய சர்க்காரின் இளகிய பண்புக்குத் தண்டனை—பல இலட்சம் அரோகரா!

அகதிகளின், புனரமைப்பிற்காக நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழித்து வருகிறது, டெல்லி ஆட்சிபீடம்! அது தவிர, அகதிகளுக்குக் கடன் திட்டம் ஒன்றையும் ஏற்படுத்தி, விரட்டப்பட்ட அவர்களது விழிகளில் வழியும் கண்ணீரைத் துடைக்கும் செயலில் ஈடுபட்டது!

அந்தத் திட்டத்தின்படி 12 000 பேர்களுக்குக் கடன் தந்தார்களாம்!

ஆனால், கடன் பெற்றுச் சென்ற அவர்களில் 100 பேர் நாடோள்வோரின் நெற்றியிலே 'நாமம்' சாத்தி, வாங்கிய கடனைச் சொந்தப் பொருளாக்கிக் கொண்டார்கள்!

அந்த 100 பேரின் விலாசமே தெரியவில்லை இப்போது!

அந்தக் கடன் தொகையான ஏழு லட்ச ரூபாய் 'ஊழல்' என்ற திமிங்கிலத்தின் பசிக்கு உணவாகிவிட்டது!

அந்த அகதிகள் மட்டுமல்ல; அவர்களுக்குக் கடன் தருவதற்கு நம்பிக்கை ஊட்டி, அந்தத் தொகைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டவர்களும் இப்போது மாயமாய் மறைந்து விட்டார்களாம்!

"அப்படிப் பொறுப்பேற்றுக் கொண்டவர்களில் பெரும்பாலோர் போலிகள் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டு விட்டது!" என்று நாட்டு நிர்வாகத்தின் முகத்திலே கரி பூசப்பட்ட சம்பவத்திற்கு விளக்கம் தருகிறது, தணிக்கைக் குழு!

"கடன் தருவது, பொறுப்பேற்றுக் கொள்பவர்களின் உறுதி மொழியைப் பொறுத்ததுதான் என்றாலும், அப்படி முன்வந்தவர்களை எடைபோடத் தவறியது பெரும் குற்றம்! அவர்களது 'உத்தரவாதம்' பயன் தருமா என்று ஆராயத் தவறியதை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்!"

— இந்த அத்தியாயத்தின் கடைசிப் பகுதி இப்படி முடிக்திருக்கிறது!

அடுத்து.........

★★★★ கதர் உற்பத்தி விற்பனைக்கு உதவியளிப்பதில் மோசடி—இலட்சக் கணக்கில் ஊழல்!

கதர் உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் முறை ஒன்றை இந்திய சர்க்கார் கொண்டிருக்கிறது! அந்த மானியமும் விற்பனைத்

[தொடர்ச்சி பக்கம்—12]

அழகிரி அரங்கிலே கூடுவோம்!

கடல் கடந்தோர் கடிதம்

வேலை நிறுத்தம் வெற்றியா? தோல்வியா?

அன்புள்ள ஆசிரியருக்கு, ஒரு ஏழை பள்ளி ஆசிரியன் எழுதிய மடல்!

சிங்களத்தின் சரித்திரம் இதுவரை கண்டிராத மகத்தான தொழிலாளர் போராட்டம் ஒன்று நடைபெற்று வருவது நீங்கள் அறிந்ததே! 118 தொழிற் சங்கங்களைச் சேர்ந்த சுமார் ஒன்றரை லட்சம் அரசாங்கப் பணியாளர்கள் தங்களது அடிப்படை உரிமைகள் சில மறுக்கப்பட்ட காரணத்தால், பண்டார நாயகாவின் ஆட்சிக்கு நல்லதோர் பாடம் கற்பிக்க வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர்!

உலகமே இந்த வேலைநிறுத்தம் குறித்து வியப்பிலாழ்ந்திருக்கும் நேரத்தில், என்னைப் போன்ற ஏழை ஆசிரியர்களை வேதனையில் ஆழ்த்தும் செய்தி ஒன்றை சிங்கள அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது.

என்னைப் போன்ற 60,000 ஆசிரியர்களின் இந்த மாத சம்பளம் உரிய காலத்தில் வழங்கப்பட மாட்டாதாம்—காரணம், அரசாங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம்தானும்!

அரசாங்கத்தின் இந்தச் செய்தி மிகவும் விசித்திரமாக இருப்பதோடு—அதன் அறிவிப்புகள் ஒன்றுக்கொன்று எவ்வளவு முரண்பாடாக இருக்கின்றன என்பதையும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது!

வேலை நிறுத்தத்தால் சம்பளப் பட்டுவாடா பாதிக்கப்படுகிறது!

அதனால் அரசாங்கம் ஓர் உண்மையைத் தானாகவே ஒப்புக் கொண்டிருக்கிறது. அதாவது, ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் அரசாங்கம் பாதகமடைந்திருக்கிறது—அதாவது, வேலைநிறுத்தம் மகத்தான வெற்றியைத் தந்திருக்கிறது!

அதே நேரத்தில், வேலை நிறுத்தம் குறித்து அரசாங்கச் சார்பு அறிக்கைகளை உற்று நோக்கினால்...

"ஊழியர் பலர் வேலை நிறுத்தம் செய்ததாக மிரட்டியதாலும், வேலைநிறுத்தமே செய்து விட்டதாலும் எப் பாதகமும் ஏற்படவில்லை; வேலைகள் என்னவோ ஒழுங்காகத்தான் நடைபெறுகின்றன!"

இப்படித்தான் இன்றுவரை ஆட்சி பீடம் சொல்லுகிறது! பத்திரிகைகளுக்கு செய்தி அனுப்புகிறார்கள்! வானொலி மூலமும் தெரிவிக்கிறார்கள்!

இப்படி இரண்டு முரண்பட்ட கருத்துக்களை ஏன் அரசாங்கம் வெளியிட வேண்டும்? நன்றாகக் கவனித்தால், அரசாங்க ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே இருக்கின்ற சுமுக உறவை வெட்டி வீழ்த்த அரசாங்கம் சதி செய்கிற உண்மை நன்கு புலப்படுகிறது!

ஆசிரியர் சமூகம் இதனால் ஏமாற்றப்படமாட்டாது என்பது என்னவோ திண்ணம்! எனவே வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களுக்கு எதிராக ஆசிரியர்களைத் தூண்டிவிடலாம்; இனி எந்தக் காலத்திலும் அந்த இரு பகுதியும் ஒன்றுவதை இப்போதே தடுத்துவிடலாம் என்று அரசாங்கம் எண்ணுவது வெறும் பகற்கனவாகும்!

அன்புள்ள,

செல்வநாயகம்

(மட்டக்களப்பு—இலங்கை)

அருணோதயம் மலிவுப் பதிப்புகள்!

பேராசிரியர்கள் பாராட்டுரைகளுடன்
மே முதல் வாரம் வெளிவருகிறது !

முத்தொள்ளாயிரம் விலை ரூ. 1—00
(விரிவுரை—காட்சி—விளக்கங்களுடன்)

குறுந்தொகை (1—ம் பாகம்) விலை ரூ. 1—50
(200 பாடல்கள்—விரிவுரை—காட்சி விளக்கங்களுடன்)

குறுந்தொகை (2—ம் பாகம்) விலை ரூ. 1—50
(200 பாடல்கள்—விரிவுரை—காட்சி விளக்கங்களுடன்)

[குறுந்தொகை தெளிவான விளக்கங்களுடன் வெளியிடுவதனால் 700 பக்கங்களுக்குமேல் வருகிறது. அதனால்தான் இரண்டு பாகங்களாக வெளியிடுகிறோம்.]

முன்பணம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மற்றும் எமது திருமணப் பரிசு நூல்கள் :

இல்லற இன்பம்	—அருணன்	ரூ. 1—00
நலம் பெற்று வாழ்க	—வே. கபிலன்	ரூ. 1—25
இன்பத்துள் இன்பம்	—வே. கபிலன்	ரூ. 1—50
வாழ்க்கையே ஒருகலை	—வே. கபிலன்	ரூ. 1—00
இலக்கியத்தில் காதல்	—காரை. முத்துப் புலவர்	ரூ. 1—25
மலர் மணம்	—பேரறிஞர்கள்	ரூ. 2—00

அருணோதயம்,
இராயப்பேட்டை — சென்னை—14.

பிறைவானம்..

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகிவிட்டது! இருந்தாலும் மந்திரச் சொல் இருக்கிறதே; அதைப் பயன் படுத்தினால்...தங்கம் அம்மாவிடம் மெதுவாகச் சென்றான்.

மந்திரச் சொல்லை இங்கும் பிரயோகித்தான்!

என்ன ஆச்சரியம்! அம்மாவின் கோபம் தலை தெறிக்க ஓடிவிட்டதே! தங்கத்தின் கையில் மேலே ஒளிய வைத்திருந்த பூரிகளில் ஐந்தை எடுத்துத் தந்துவிட்டார்களே!

தங்கத்திற்கு ஒன்றுமே புரியவில்லை! வேக வேகமாக அப்பாவிடம் ஓடினான், மாநாட்டுக்கு அழைத்துச் செல்ல முடியுமா; முடியாதா—என்று கேட்டுவிட!

அப்பா அவனைக் கண்டதும் படித்துக் கொண்டிருந்த தினசரியால் முகத்தை மறைத்துக் கொண்டார்!

தங்கத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது, அப்பாவே அலட்சியம் செய்ய ஆரம்பித்து விட்டாரே என்று! "மாநாட்டுக்கு அழைத்துக் கொண்டு போகாவிட்டால் சுவற்றில் மோதி மண்டையை உடைத்துக் கொள்வேன்!" என்றல்லவா அவன் கேட்டான்! அந்தக் கோபக்காரனுடன் பேச அப்பாவுக்கு என்ன; பைத்தியமா? தங்கம் ஆத்திரத்தால் துடித்தான். அதே கணம் மந்திரச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று செய்த முடிவு அவன் நினைவுக்கு வந்துவிட்டது. மெதுவாக நகர்ந்து அப்பாவிடம் சென்றான்.

மந்திரச் சொல்லைப் பயன்படுத்தினான்!

என்ன இது புதுமை? எப்போதும் மூக்கின்மேல் கோபத்தைத் தூக்கி உட்கார வைத்திருக்கும் அப்பாவா இவர்? அவர் முகத்திலிருந்து கடுகடுப்பு எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டதே! களிப்போடு—கனிவோடு பார்க்கிறாரே!

"தங்கம்! என் கண்ணே! உன்னை நிச்சயம் மாநாட்டுக்கு அழைச்சிகிட்டுப் போறேன்டா! அங்கே ஊர்வலம் இருக்கும்; நாடகம் நடக்கும்; அவையெல்லாம்விட அருமையான கருத்துக்களைச் சொல்ல நம்ம தலைவர்கள் எல்லாம் வருவாங்க; நீ அதை எல்லாம் கவனமா கேட்கணும்! குறும்புத்தனம் செய்யக்கூடாது. ஏன்னு; கூட்டம் லட்சக் கணக்கிலே வரும்! என்ன; சரிதானு? புறப்படுறதுக்குத் தயாராயிரு!"

—அப்பாதான் இப்படிச் சொன்னார்!

தங்கத்திற்கு ஒரே வியப்பு! தன்னைப் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டவர்கள் இப்போது புன்முறுவல் காட்டுவானேன்? குறும்புக்காரன்; இரட்டை வால்; கெட்டப் பிள்ளை—என்றெல்லாம் 'நாமகரணங்கள்' சூட்டியவர்கள் எல்லாம் இப்போது நல்ல பிள்ளை என்ற பட்டத்தைச் சூட்டுவானேன்?

எல்லாம் அந்த மந்திரச் சொல்லின் மகத்துவமல்லவா—மகிமையல்லவா!

அப்படி எந்த சொல்லைத்தான் அவன் புகுத்தி இந்த நல்ல பெயரைப் பெற்றான்? மந்திரம் எதுவும் இல்லை அதல்; ஆனால் மனதாபிமானம் இருந்தது!

"[illegible] ஜகதா! அந்த ஸ்டாம்பை எல்[illegible] எனக்குத் தர்றியா? இல்லே; பல்லை எல்லாம் உதிர்த்து எண்ணட்டுமா?" என்று கேட்டே பழக்கப்பட்ட தங்கம், இப்படிச் சொன்னான் இப்போது:

"தயவுசெய்து...எனக்கும் ரெண்டு ஸ்டாம்பு தர்றியா ஜகதா? தயவு செய்து...தயவு செய்து!..."

அம்மாவுக்குத் தெரியாமல் அடுப்பங்கரைப் பண்டங்களை எடுத்துத் தின்று பழக்கப்பட்ட தங்கம், இப்படிச் சொன்னான் இப்போது:

"தயவுசெய்து...எனக்கு பூரி தர்றியாம்மா...தயவுசெய்து ... தயவு செய்து...!"

"மாநாட்டுக்கு அழைத்துச் செல்லா விட்டால் மண்டையை உடைத்துக் கொள்வேன்!" என்று கத்திய தங்கம், இப்படிக் கேட்டான் இப்போது:

"தயவுசெய்து......என்னையும் மாநாட்டுக்கு அழைச்சிக்கிட்டுப் போங்கப்பா...தயவுசெய்து ...தயவுசெய்து!..."

இவைகளிலே என்ன மந்திரம் இருக்கிறது?

"தயவுசெய்து...தயவுசெய்து!..."

—இந்தச் சொற்கள்தான் இருக்கின்றன. அதிலே பணிவு இருக்கிறது; நல்ல பண்பு பளிச்சிடுகிறது; மற்றவர்களுடைய மனதில் நல்ல எண்ணம் பாய்ச்சத்தக்க பலம் இருக்கிறது; பாராட்டுகளைப் பெறும் வலு இருக்கிறது!

"அதை—அந்த அற்புத சக்தி படைத்த சொல்லை — இதுவரை நான் தெரிந்து கொள்ளாது இருந்து விட்டேனே!" என்று வருந்தினான் தங்கம்! நினைத்ததை நடத்திக் கொடுக்கும் அந்த மந்திரச் சொல்லை அவனுக்கு 'உபதேசித்த' பெரியவரின் ஞாபகம் உடனே அவனுக்கு ஏற்பட்டுவிட்டது! மறுகணம் பூங்காவை நோக்கி ஓடத் தொடங்கினான்.

●

தன் எதிரில் இரைக்க இரைக்க ஓடிவந்து நின்ற தங்கத்தைக் கண்டதும், பெரியவரின் கருணை ததும்பும் கண்களில் களிப்பு தோன்றியது!

"தாத்தா!.....தாத்தா!....உங்கள் மந்திரச் சொல்லுக்கு என் நன்றி தாத்தா!..."

"நான் ஏற்றுக் கொள்ள முடியாது தம்பி!" என்றார் பெரியவர், 'டக்' என்று!

"தயவு செய்து நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!... தயவு செய்து...தயவு செய்து!"

என்றான் தங்கம்! கிழவர் தன் இதழ்க் கோடியில் மெல்லத் தலை நீட்டிய புன்சிரிப்பை மறைக்கமுடியாமல் சிரித்துவிட்டார்! "ஏ, நல்ல பிள்ளை! உன்நன்றியை நான் எப்படித் தம்பி ஏற்றுக்கொள்ள முடியும்?... இதோ, உன் நன்றிக்கு ஏற்றது இதுதான்!" என்று தன் கையிலிருந்த சிறிய புத்தகத்தை அவனிடம் நீட்டினார்: பார்த்தான் தங்கம்—

திருக்குறள் !

"திருவள்ளுவரின் படத்தை வீட்டிலே அழகாக சட்டமிட்டு, பூமாலைகள் சூட்டி, மாட்டிவிட்டால் மட்டும் போதாது தம்பி! படிக்க வேண்டும்! படித்த வழி நடக்க வேண்டும்!...இந்தக் குறளைப் படி!... இதன் கருத்தே நான் உனக்கு சொல்லித்தந்த மந்திரச்சொல்!" என்றார் பெரியவர்! ஒரு குறளைக் காட்டினார்!

"இனிய உளவாக இன்னாத
கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று..."

தங்கம்—'நல்ல பிள்ளை'யாகிவிட்ட தம்பி—அந்தக் குறளின் உட் பொருளை இப்போதுதான் புரிந்து கொண்டான்!

நீங்களும் குறள் படியுங்கள்; பின் அவ்வழி செல்லுங்கள்! செய்வீர்களா?...தயவு செய்து!...தயவு செய்து!...தயவு செய்து!...

—சொர்ணம்

பிறைவானம்

கையிலிருந்த சிறிய புத்தகத்தை விரித்து, முகத்திற்கு நேரே பிடித்தபடி படித்துக் கொண்டிருந்தார், அந்தப் பெரியவர்!

வயதாகிவிட்ட காரணத்தால் கண்கள் சரியாகத் தெரியவில்லை போலும்; நும்பிலையை மறந்து உன்னிப்பாகப் படித்துக் கொண்டிருந்தார்!

"கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தால் என்ன; தலை வெடிச்சுடுமோ?"

—அப்போது இந்த அதட்டும் குரல் எழும்பியது. பெரியவர் திடுக்கிட்டுவிட்டார். புத்தகத்திலிருந்து கண்ணை எடுத்தினார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி சுத்தம் செய்தார். மீண்டும் மாட்டிக் கொண்டார். எதிரே கவனித்தார்.

"சர்க்கார் கட்டிப்போட்ட 'பார்க்'கை யெல்லாம், பணம் போட்டு வாங்கின சொந்தத் தோட்டமா நெனைச்சுக்கிறது!..."—என்ற முணுமுணுப்பு மறுபடியும் எழும்பியது!

பெரியவருக்கு சிரிப்புதான் வந்தது. இத்தனை அதிகாரத்தோடு கோபமாகப் பேசிய அந்தப் 'பெரிய' உருவத்தைக் கண்டால் யார்தான் சிரிக்கமாட்டார்கள்? முகத்தில் என்னும் கொள்ளும் வெடிக்க சிறுவன் தங்கம்தான் நின்று கொண்டிருந்தான் எதிரே!

"என்ன சிரிக்கிறீங்க? உங்களைத்தான் சொல்றேன்!......உங்களுக்கென்ன கொம்பா முளைச்சிருக்கு? பெரி...ய்...ய்...ம...மனிசரு! கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தால் என்னவாம்?" என்றான் மறுபடியும்!

பெரியவர் மறுபடியும் தனக்குள் சிரித்துக் கொண்டார்! "இதற்குத்தானா இத்தனை ஆர்ப்பாட்டம்!" என்று சொல்லிக் கொண்டே மெதுவாக நகர்ந்து உட்கார்ந்தார்.

"உம்..." என்று முறைத்துக் கொண்டே 'டக்'கென்று 'பெஞ்சி'யில் உட்கார்ந்தான் தங்கம்.

பெரியவர் அவன் முகத்தைக் கவனித்தார். அவன் எதையும் பார்க்கவில்லை. ஓடி வந்ததின் காரணமாக தலை கலைந்துகிடந்தது. முகத்தில் விழுந்து கண்களை மறைத்துக் கொண்டிருந்த தலை ரோமத்தை அனாயாசமாகத் தட்டி விட்டுக் கொண்டான். அவன் முகம் சிவந்திருந்தது — அவ்வளவு கோபம்! கண்கள் கோவைப் பழங்களாக இருந்தன — அத்தனை ஆத்திரம்! 'பார்க்'கில் ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்த பிறைவானப் பட்டாளமோ — வானொலி இசையோ — எதுவுமே அவனைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை! 'உம்' மென்று உட்கார்ந்திருந்தான்!

"என்ன தம்பி, கோபமா?"—கிழவர் மெதுவாகத்தான் கேட்டார்.

"உம்..." என்று மட்டும் உறுமினான், தங்கம்!

"என்ன அப்படி கோபம்?..."

"ஆயிரம் இருக்கும்! அதெல்லாம் கேட்க நீங்க யார்? பெரிய போலீஸ் ஐ.ஜி—விசாரிக்க வந்துவிட்டார், விசாரிக்கி......"—அப்பப்பா!.........அந்தக் குரலில்தான் என்ன கொடுமை! இருந்தாலும் பெரியவர் முகத்தில் மட்டும் அப்போதும் கோபம் தோன்றவில்லை!

"ஏன் தம்பி, வீட்டில் ஏதாவது சண்டையா?..."

"வீடா அது?...காடு! சுடுகாடு!...நான் எங்கேயாவது ஓடத்தான் போறேன்!......அல்லது கடலிலே யாவது விழுந்து சாகத்தான் போறேன்!..."

"ஐயய்யோ!... ஏன் தம்பி அப்படி?..."

"பின்னே என்ன? நான் 'கெட்டப் பிள்ளை'யா? குறும்புக்காரனு? எப்பப் பார்த்தாலும் 'வள், வள்'ளுன்னு விழுறேனு என்ன?"

"அடப் பாவமே! யார் சொல்லுவா அப்படி?...நெசமா ரொம்ப ரொம்ப தங்கமான குழந்தையாச்சே நீ!"

"இல்லியாம்!......நான் கெட்ட பிள்ளையாம்!......அப்பாடி! என்ன தைரியம் அப்படிச் சொல்ல!"

"அந்தத் துணிச்சல்காரன் யார் தம்பி?"

"'காரன்' இல்லே, 'காரி'! பொல்லாத 'பேபூபிகா'!..."

"என்ன; பேபூபிகாவா......அப்படின்னு?..."

"தெரியிலே! (பே)ய், (பூ)தம், (பி)சாசு, (கா)ட்டேரி!...எல்லாம் சேர்ந்த ஒன்னுதான் என்னை கெட்ட பிள்ளைங்குது! ஒரு அறை கொடுத்தா பல்லெல்லாம் அப்படியே..."

"வேண்டாம்; வேண்டாம்! யாரு சொன்னு அப்படி?..."

"அந்த ஜகதாதான்! கிராமத்திலேருந்து படிக்க வந்திருக்கே, அந்தச் செல்லச் சிசுதான்! என்ன திமிர்?...எங்க அப்பாவை 'மாமா, மாமா'ன்னு நல்லா 'காக்கா' பிடிச்சு வச்சுக்கிட்டு! ஒரே செல்லம்!..."

"அப்புறம்?..."

"இப்போ நல்லா தலையிலே 'நறுக், நறுக்' இன்னு நாலு குட்டு குட்டி—'ஐயோ'ன்னு அழவிட்டுத்தான் ஓடிவந்திருக்கேன்!..."

"அப்போ தம்பி! பெண் பிள்ளையாச்சே; அழவிடலாமா?"

"பின்னே என்னவாம்? எனக்கும் ரெண்டு கொடுத்தா என்னவாம்?"

"எதை? குட்டா?....அடியா?..."

"என்ன சொன்னீங்க?....அதுக்கு வேற பயந்தாங் கொள்ளி யாராவது இருந்தா பாருங்க...'டிரங்'இலே பத்திரமா பூட்டி வைச்சிருக்கே; அதைத்தான்!"

"டிரங்கில் அப்படி என்ன இருக்கு யாருக்கும் தெரியாம?..."

"ஸ்டாம்புகள்!... வெளி நாட்டு ஸ்டாம்புகள் சேர்த்து வச்சிருக்கு நிறைய! எனக்கும் ரெண்டு கொடுத்தா என்ன? அதான் அப்பவே சொன்னேனே, அப்பாவை நல்லா காக்கா புடிச்சிட்டான்னு... அவங்க மலேயா, சிங்கப்பூர், சிலோன் இன்னும் 'பாரின்' ஸ்டாம்பெல்லாம் கொண்டுவந்து அதுக்கே கொடுக்கிறுங்க!...அழகா 'ஆல்பம்' ஒட்டி பூட்டி வச்சிருக்கு. நான் அதட்டி, உருட்டி, மிரட்டி, விரட்டிக் கேட்டாலும் தரமாட்டேங்குது!"

"அதுக்காகவா வீட்டை விட்டு ஓடிப்போவது?..."

"அதுமட்டுமா என்ன?...எங்க அம்மாவுக்கும்தான் என்னைப் பிடிக்கல்லே!..."

"என்ன செய்தாங்க?..."

"கரண்டியாலே என் மண்டையிலே அடிச்சுட்டாங்க..."

தங்கத்தின் கண்களில் இப்போது கண்ணீர் ததும்பி நின்றது! 'வந்து விடட்டுமா?' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது அழுகை!

"ஐயையோ!... உன்னை ஏன் அடிச்சாங்க? நீ தங்கமான குழந்தையாச்சே!..."

"எனக்கு 'பூரி'ன்னு ரொம்பப் பிடிக்கும்!...அதுக்காக..."

"அதுக்காகவா அடிச்சாங்க!..."

"நான் அடுப்பங்கரைக்குள்ளே புகுந்து தெரியாம ரெண்டு பூரி எடுத்தேன்!...அது தப்பா? அதுக்காக அம்மா என்னென்ன சொல்லிட்டாங்க தெரியுமா?... 'ஜகதாவைப் பார்; அவ புத்தி உனக்கு வராதுடா'—அப்படின்னு திட்டினுங்க! கரண்டியால அடிச்சாங்க!...நான் ஓடியே போயிட்டேன்!..."

தங்கம் அழத் தொடங்கி விட்டான். பெரியவர் அவனைச் சமாதானப் படுத்தினர். "ஒருத்தர் அடிச்சா, நிச்சயம் இன்னொருத்தர் அணைப்பாங்க தம்பி!" என்றார்.

"ஒருத்தருக்கும் என் மேலே அன்பு கிடையாதே!...எங்க அப்பா கூட எல்லாம் மாநாட்டுக்குப் போறாங்க....ஆனா என்னை மட்டும் அழைச்சுகிட்டுப் போகமாட்டாங்க! அங்கெல்லாம் ஒரே கூட்டமா இருக்கும்; இந்தக் 'குரங்கு' அங்கேயும் வந்து ஆட்டம் போடுமே; என்ன செய்யறது—என்று சொல்லிட்டாங்க!...நான் எதுக்காக அந்த வீட்டிலே இருக்கணும்?..."

தங்கத்திற்கு மறுபடியும் ஆத்திரம் வந்துவிட்டது! பெஞ்சியில் ஓங்கி ஒரு குத்து குத்தினான். கை வலித்துவிட்டதோ என்னவோ, மற்றொரு கையால் தடவிக்கொண்டான். மௌனமானான்.

"அதுக்காக வீட்டை விட்டு எங்கே போறதா உத்தேசம்?"

"உங்களிடம் அவசியம் சொல்லத்தான் வேண்டுமோ? இல்லாட்டி இந்தாடா தம்பி; என் 'பியூக் காரு'—அதிலே போயவா—ன்னு அனுப்பப் போறீங்களா?..."

"இல்லே; இல்லே! உன்னை யாருக்கும் பிடிக்கவில்லையல்லவா? அவர்களை எல்லாம் உன் வசத்தில் கட்டிப்போட நான் ஒரு 'மந்திரச் சொல்' வைத்திருக்கிறேன்..."

"என்ன? மந்திரச் சொல்லா?"

"ஆமாம்! அந்தச் சொல்லை உபயோகப்படுத்தினுல், ஜகதா கூட உன்னை 'நல்ல பிள்ளை', 'நல்ல பிள்ளை' என்று போற்றும்! அப்பா, அம்மா—மாமா, மாமி—அண்ணன், தங்கை—ஊர், உலகம்—எல்லாமே கூட உன்னை 'நல்ல பிள்ளை' என்பாங்க!"

"சொல்லுங்கள்! சொல்லுங்கள்!" என்று பலகையிலிருந்து கீழே குதித்தான் தங்கம்! அவனுக்கு ஒரே படபடப்பு—அவசரம்!

பெரியவர், தங்கத்தின் காதில் ரகசியமாக எதையோ சொன்னார்! தங்கம் கேட்டுக் கொண்டான்!

"இதுதான் மந்திரச் சொல்! இதைப் பயன் படுத்திப் பார்; உன் காரியம் எல்லாமே பலித்து விடும்!..."

தங்கம் உடனே தலை தெறிக்க வீடு நோக்கி ஓடினான்!

திண்ணையில் ஜகதா உட்கார்ந்திருந்தது அன்று நக்குக் கிடைத்த 'ஸ்டாம்பு'களை 'ஆல்ப'த்தில் ஒட்டிக் கொண்டிருந்தது. தங்கத்திற்கு அவைகளைக் கண்டதும் ஆசை உண்டாயிற்று! ஆனால் ஜகதாவோ...அவனைக் கண்டதும் தலையை ஒருமுறைத் தடவிக் கொண்டது. அவன் கொடுத்த குட்டுகளின் 'உறைப்பு' இன்னும் ஆறவில்லையே!...மறுகணம் ஸ்டாம்புகளை அந்தக் 'கெட்டப் பிள்ளை'யிடமிருந்து காப்பாற்ற தன் பக்கமாக இழுத்துக் கொண்டது.

தங்கத்திற்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது! அதே கணம் அந்தப் பெரியவருடைய மந்திரச் சொல் நினைவுக்கு வந்துவிட்டது! ஆமாம்; அதைத்தான் உபயோகிக்கவேண்டும்! தங்கம் மெதுவாக ஜகதாவிடம் சென்றான்.

மந்திரச் சொல்லைப் பயன்படுத்தினான்!

என்ன ஆச்சரியம்! ஜகதாவின் அழகிய கண்களிலிருந்த பயம் எங்கேயோ ஓடி மறைந்தது; அதிலே அன்பும் ஆச்சரியமும் திடீரென்று தோன்றியது! உடனே, தன் ஸ்டாம்புப் பெட்டியிலிருந்து இரண்டல்ல; பத்துக்கு மேலான வெளி நாட்டு ஸ்டாம்புகளை எடுத்து அவனிடம் நீட்டியது! "இந்தா தங்கம்! இதை வச்சுக்க! நாளைக்கு மாமா ஆபீஸிலிருந்து வந்ததும் நிறைய தர்றேன்!" என்றது. வாயெல்லாம் பல்லாக! தலையில் குட்டு தந்த வலி மாயமாய் மறைந்துவிட்டது இப்போது!

ஜகதாதானு இது? தங்கத்தால் நம்பவே முடியவில்லை! ஸ்டாம்புகளை அவசர அவசரமாக சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டு அடுப்பங்கரையை நோக்கி ஓடினான்.

அங்கே அம்மாவும் இருந்தார்கள்; அவர்கள் கையில் கரண்டியும் இருந்தது; அதோடு, முகத்திலே இன்னும் கோபமும் அடங்காமல் இருந்தது! தங்கத்தைக் கண்டதும் முகத்தை 'சடக்'கென்று திருப்பிக் கொண்டார்கள்!

தங்கத்துக்கு என்னவோபோல்

[தொடர்ச்சி பக்கம்—10]

நல்ல பிள்ளை

புது விருந்தாளி!

பயங்கரவாதி—

பகற் கொள்ளைக்காரன்—

காலம் குறித்துக் களவாட வருகின்ற பரம்பரைக் கள்ளன்—

ஆயுதம் தாங்கி அகப்பட்டோரை அடித்து வீழ்த்தும் கொடிய மனம் படைத்த கோர நெஞ்சினன்—

பதினறு முறை போலீஸ் காவலிலிருந்து தப்பியோடி, 'கேடி' முத்திரை பொறித்துக் கொண்ட சமுதாயத் துரோகி—

இப்படிப் பட்டவனை எங்கே பார்க்கலாம்?

சுழல் விளக்கின் ஒளிக் கதிர் தேடுகிறது!

நல்லவர்களுக்கு மத்தியிலே நுழைய முடியாது அவனல்!

கொல்லவும் பின் வாங்காத பொல்லாத குணம் படைத்த துரோகக் கும்பலில்தான் அகப்படுவான்!

அல்லது, நல்லவர்களின் கண்களிலிருந்து தப்ப—போலீசாரின் பார்வைக்குப் பயந்து—நீதிக்கும் நேர்மைக்கும் அஞ்சி—விலங்கைப்போல் வனந்திரங்களில் திரிந்துகொண்டிருப்பான்!

ஆனல் அப்படிப்பட்ட கள்ளன் ஒருவனை வேறு ஓர் இடத்தில் கண்டு பிடித்து 'இப்படியும் நடக்குமா?' என்று வியக்கிறது சுழல் விளக்கு!

அப்படிப்பட்ட நபர் ஒன்று ராஜ்கோட்டில் — காங்கிரசில் இப்போது சேர்ந்திருக்கிற திடுக்கிடும் செய்தி கிடைத்திருக்கிறது!

பூபதி என்கிற பிரபல கொள்ளைக்காரனை நாடு இதற்குள் மறந்திருக்க முடியாது! கொலை, கொள்ளைக்கு அஞ்சாத அந்தக் கொடியவனைத் துரத்தித் துரத்திக்கொன்றார்கள் வடக்கே! அவனது அத்தியந்த நண்பன்தான் இப்போது புதிதாக கதருடை மாட்டியிருக்கும் அந்தக் கண்ணியவான் — ஷேலார் ரவுத்கான் என்பார்!

காலுவான் என்ற ஒரு கொடிய பிறவி பூபதியின் கூட்டத்திலே உண்டு—அந்த ஆசாமியினுடைய உடன் பிறந்த சகோதரன்தான் இந்தப் புதுப் பிரவேசி!

இந்த வெட்கக் கேடான செய்தியை பூரிப்போடு வெளியிடுகிறது ராஜ்கோட் காங்கிரஸ்!

காங்கிரஸ் கோட்டை இன்று பாழ் மண்டபமாகிவிட்டது! அதன் கதவுகள் உளுத்து உடைந்து விட்டன! அது அகல வாய் பிளந்து திறந்து கிடக்கிறது! கொள்கைக்காக உயிர் கொடுக்கவும் தயார்—என்றவர்களும் அதிலே நுழைந்தார்கள்! இப்போது கொள்ளைக்காரர்களையும் 'வருக, வருக' என்று வரவேற்கிறது! ஃ

பாரதத்தின் பெருமை..

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

தொகைக்கு ஏற்ற அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததாம்!

ஆனல் சில விற்பனை நிறுவனங்களோ விற்பனைத் தொகை புள்ளி விபரத்தைத் தவருகக் காட்டி—வேண்டுமென்றே அதிகத் தொகைக்குக் கணக்கு எழுதிக்காட்டி, அதிகத் தொகையை மானியமாகப் பெற்றுக்கொண்டனவாம்!

நாட்டு நிர்வாகத்தின் இந்தப் பொறுப்பற்ற தன்மை மூலம் 1953-லிருந்து 1955 வரை—இரு ஆண்டுகளில் 13 லட்சம் ரூபாய் பாழாகியிருக்கிறது!

இப்படி இலட்சக் கணக்கான மக்களின் வரிப்பணம் கொள்ளை போனதற்கு சர்க்கார் என்ன தீர்ப்பளிக்கிறார்கள்?

இந்தக் கேள்விக்கு எந்த வழக்கு மன்றமும் பதில் தர முடியாது!

ஆனல் மக்கள் இதயம் என்ற வழக்கு மன்றம் இப்படித்தான் தீர்ப்பளிக்கும், "ஏ, ஊழல் நிறைந்த சர்க்காரே! எங்கள் உடலுழைப்பை — உதிரத்தின் பிறப்பை —'ஊழல்' என்ற கிமிங்கிலத்திற்கு இரையாக்குகிருயே; 'காலம்' என்ற சுறவுக்கு உன்னை நாங்கள் இரையாக்கி விடுவோம்!" என்று! ஃ

1958, மே திங்கள், 10, 11 நாட்களில் தஞ்சை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

திருவாரூரில்

தைக்கால் திடல் - பன்னீர்ச்செல்வம் பந்தல் - அழகிரி அரங்கில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:
கே. ஏ. மதியழகன் பி. ஏ.	ப. உ. சண்முகம் எம். எல். ஏ.

அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டு தனித் தனித் தலைப்புகளில் சிறப்புரை நிகழ்த்துவர்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் இன்னிசையுடன் மாநாடு துவங்கும்.

முதல் நாள்:
10-5-58 சனி இரவு 10 மணிக்கு
மு. கருணநிதி
நடிக்கும்
புதுமை நாடக மன்றத்தாரின்
உதய சூரியன்
(கொள்கை விளக்க நாடகம்)

★ ★ ★

இரண்டாம் நாள்:
11-5-58 ஞாயிறு காலை
9 மணிக்கு
குளிக்கரை, இசைப்பெருங்கோ
கே. எஸ். பிச்சையப்பா
அவர்களின்—நாயன இசை
மாநாட்டில்
நாகூர் அனீபா,
மன்னை சுந்தரேசன்
ஆகியோர் இயக்கப் பாடல்கள் முழங்குவர்.

இரு நாட்களுக்கும் நுழைவுக்கட்டணம்: ரூ. 5, 3, 2. பெண்கள் ரூ. 1.

10—5—58—ந்தேதி காலை 9 மணிக்கு மாபெரும் ஊர்வலம், திருவாரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்படும்.

என். எஸ். இளங்கோ	மு. கருணநிதி	ப. நாராயணசாமி	கு. அடைக்கலம்	அ. நாகப்பன்
வ. கு. தலைவர்	பொருளாளர்	சி. கிருட்டினமூர்த்தி	அ. நடராசன்	வி. பொறுப்பாளர்.
		செயலாளர்கள்	தொ. ப. தலைவர்	

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6